66

கதர்மலர் பிரசுரம் 24

அகில பாரத சர்க்கா சங்கத்தின்

வேலைத் திட்டம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 JUN 1949
MADRAS



பிரசுரித்தோர் :
காரியதரிசி,
அகில பாரத சர்க்கா சங்கம்
தமிழ் நாட்டுக் கிளை,
திருப்பூர்

M7K
N49
10476

கதர்மலர் பிரசுரம் 24

அகில பாரத சர்க்கா சங்கத்தின்

வேலைத் திட்டம்

பிரசுரித்தோர்:
காரியதரிசி,
அகில பாரத சர்க்கா சங்கம்
தமிழ் நாட்டுக் கிளை,
திருப்பூர்

முதற் பதிப்பு—ஏப்ரல் 1949

[உரிமைப் பதிவு]

விலை அணா 8

(ஹிந்தியிலிருந்து மொழி பெயர்த்தது)

KABEER PRINTING WORKS, TRIPLICANE, MADRAS

முன்னுரை

சர்க்கா சங்கத்தின் வேலையில் வேலையில்லாதவர்களுக்கு வேலை கொடுத்தல் அல்லது நிவாரண மளித்தலும், அதன் பொருட்டு கதர்த் தொழிலுக்கும் கதர்க் கலைக்கும் புத்துயிரளித்தலும் முக்கிய நோக்கமாய் இருந்துவந்த வரையில் சர்க்கா சங்கம் பல பகுதிகள் கொண்ட விஸ்தாரமான வேலைகளில் ஈடுபட்டிருந்ததில்லை. கதர் உற்பத்தி, விற்பனை, உயர்ந்த ரக கதர் மாதிரிகளை கண் காட்சியின் மூலமாகப் பலருக்கும் காட்டுதல், கதர் உற்பத்தி சம்பந்தமான வேலைகளில் போட்டிகள் நடத்துதல் ஆகியவற்றை மக்கள் புரிந்து கொள்ளுதல் சுலபமாயிருந்தது. ஆனால் எந்த கிராமப் புனர் நிர்மாண மென்பது கதர் வேலையின் உண்மையான இறுதி லக்ஷ்யமோ அதுவே வற்புறுத்தப்பட தொடங்கியது முதல் இயற்கை யாகவே புதிய புதிய பிரச்னைகள் நம்முன் வரத் தொடங்கி சர்க்கா சங்கத்தின் வேலைத்திட்டத்தில் பல புதிய அம்சங்களைச் சேர்த்து அதை விரிக்க வேண்டுமென்பது அதிகமாக உணரப்படலாயிற்று. சென்ற 3, 4 வருஷங்களில் எந்தெந்தபு திய முறைகளை சங்கத்தின் மூலமாகவே அமுலுக்குக் கொண்டு வருவதென்று முடிவு செய்யப் பட்டதோ அவைகளெல்லாம் அவ்வப்பொழுது சர்க்கா சங்கத்தின் 'சுற்றுக் கடிதங்கள்', 'காதி ஜகத்' மூலமாயும், 'நவ ஸம்ஸ் கரண்' போன்ற புஸ்தகங்கள் மூலமாகவும் வெளியிடப்பட்டு வந்தன. ஆனால் மேலெழுந்த வாரியாகப் பார்ப்போருக்குச் சங்கத்தின் வேலைத்திட்டங்களை யெல்லாம் ஒருமிக்கவும் சுருக்கமாகவும் எடுத் துக் கூறும் புஸ்தக மொன்று இருத்தல் அவசியமென்று உணரப் பட்டு வந்தது. அந்தத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகவே இச் சிறு நூல் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

சங்கத்தின் கதர் உற்பத்தியும் விற்பனையும் எவ்வளவு பிரபல மாகப் பரவி யிருக்கின்றனவோ அவ்வளவு சங்கத்தின் புதிய வேலைத்

திட்டம் இன்னும் பரவவில்லை. ஏனெனில், அதிலுள்ள சில வேலை களை சங்கம் தன் அமைப்பைக் கொண்டே செய்வது சாத்தியமில் லாமல் பொது ஜனங்களின் உதவிகொண்டு செய்யவேண்டு மெனக் கருதப்பட்டிருக்கிறது. மக்கள் அவ்வகை உதவியை அளிப்பதற்குத் தூண்டப்பட்டு முன்வரும் பொழுதுதான் அவை முன்னேற்றம் அடைய முடியும். சில காரியங்களோ சர்க்கா சங்கத்தின் ஊழியர் களே செய்யவேண்டியவை. ஆனால் அவைகளிலுள்ள புதுமை காரணமாக, சங்கத்தின் ஊழியர்கள் அவற்றை இன்னும் முற்றி லுமே ஏற்றுக்கொண்டாக வில்லை. சங்கத்தின் வேலைகளில் பெரும் பாலானவை இதுவரையில் பணத்தைக் கொண்டே நடந்து வந்திருக்கின்றன. இப்பொழுது அரசாங்கமும் நம்முடையதாய் இருப்பதால் அதையும் நம் வேலைக்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற ஆசை இயற்கையிலேயே தோன்றியிருக்கிறது. ஆனால் உண்மையான நிர்மாண வேலை எதுவும் அதிகாரத்தையோ பொருளையோ கொண்டு நடைபெறுமல் அறிவு, உழைப்பு, உறுதி ஆகியவற்றைக் கொண்டே நடக்கக் கூடியதாயிருக்கிறது. சமூகத்தையும் கடமையுணர்ச்சியையும் நம்பிக் காரியம் செய்தல் அதிகாரத்தையும் பொருளையும் கொண்டு செய்வதைவிட அதிகச் சிரமமானது. அதற்குக் காலமும் அதிகம் வேண்டியிருக்கிறது. அறிவு, தியாகம், தவம், தீரம் ஆகியவ்வையும் வேண்டியிருக்கின்றன. ஆனால் உறுதியான வேலையெதுவும் இந்த இரண்டாவது முறையி னலேயே நன்ருக நடக்க முடிகிறது. ராட்டையின் வேலைத் திட்டத்தில் அடங்கியிருந்த நோக்கம் கிராம ராஜ்யம் அல்லது அனைவருடைய ஆட்சியாகும். அதற்கு ராட்டைக்குள்ள நிவாரணம் அளிக்கும் சக்தி எவ்வளவு முக்கியமானதோ, அதைவிட சுரண்டலைத் தவிர்க்கும் சக்தி அதிக முக்கியத்வம் வாய்ந்ததாகும். இந்தச் சுரண்டலைத் தவிர்க்கும் சக்தியைப் பெறுவதற்கு நன்கு 'அறிந்து உணர்ந்து' செய்யப்படும் சுயதேவைப் பூர்த்தி இன்றி யமையாததாகும். சுயதேவைப் பூர்த்தியை அனுஷ்டிக்கும் மனிதன் மிகவும் குறைந்த நிர்ப்பந்தங்களுடன் வாழ்க்கை நடத்தத் திறமை பெறுவான். இத்தகைய சுயதேவைப் பூர்த்திக்கு ஆதாரமா யிருப்பது ராட்டையே. சர்க்கா சங்கம் இத்தகைய சுயதேவைப் பூர்த்தியை உண்டாக்குவதற்கான வேலையைச் செய்ய வேண்டும். உண்மை நிவாரண வேலை சுரண்டலைத் தவிர்க்கும் பணியிலேயே

அடங்கியிருக்கிறது. நிவாரணம் பெறும் மனிதனுக்குத் தன் சக்தியின்மையின் உணர்ச்சி தோன்றுவது இயற்கை. கதர் நிவாரணமளிக்கும் ஒரு பெரிய சாதனமென்று ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் உண்மையில் நிவாரணமே தேவையில்லாத சமுதாயத்தை அமைப்பதே அதன் முக்கிய நோக்காகும். அது சுயதேவைப் பூர்த்தியின் மூலமாகவே கை கூடும். ஆகையால் சுயதேவைப் பூர்த்தி வேலையையே சங்கம் முக்கியமான வேலையாகக் கருதுகிறது. அதைச் செய்கையில் நிவாரண வேலையையும் நேரிடையாகச் செய்ய நேருமானல் சங்கம் அதற்கும் தயங்காது. சங்கத்தின் இந்தக் கொள்கையை எத்தனேயோ கதர்ப் பற்றுள்ள தேச ஊழியர்களாலும் உதார குணமுள்ள கதர் அன்பர்களாலும் புரிந்துகொள்ள முடியவில்லை. அவர்களுக்கு நிவாரண வேலையிலுள்ள பற்று காரணமாக அவர் களால் கதர் உற்பத்தி குறைந்து போவதை சகிக்கமுடியவில்லை. நிவாரண வேலையை விரும்பும் சங்கத்தின் ஊழியர்களும் உற்பத்திக் குறைவைக்கண்டு திகிலடைகிறார்கள். இன்றைய சங்கத்தின் வேலை இவ்வாறு சந்தேகம், குழப்பம் ஆகியவற்றினிடையே நடக்க வேண்டியதாயிருக்கிறது. இப்பொழுது சங்கம் அரைகுறையான நிவாரண வேலையை நிறுத்தி நீடித்த நிவாரணமளிக்கக் கூடிய சுய தேவைப் பூர்த்தியை நோக்கி முன்னேற வேண்டும். இதன் பொருட்டு சங்கம் பல புதிய வேலைத் திட்டங்களை வகுப்பதோடு புரட்சிகரமான மாறுதல்களையும் செய்தாக வேண்டியிருக்கிறது. இப்பொழுதைக்கு நேரிடையாக நடக்கும் நிவாரண வேலைகளை நிறுத்தாமலிருப்பற்குச் சங்கம் முயற்சி செய்து வருகிறது. ஆனால் சுயதேவைப் பூர்த்திவேலை அதிக முக்கியமான தாகையால் சங்கம் தன் சக்தியையும் பொருளையும் அதற்கே செலவிட, பொதுமக்கள் நேரிடையான நிவாரண வேலையைத் தாமே ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்த நோக்கத்தை எய்தும் பொருட்டு என்னென்ன வேலைகள் செய்ய வேண்டுமென்று சங்கத்திற்குத் தோன்றியிருக் கிறதோ அவற்றுள் முக்கியமானவையெல்லாம் இப்புஸ்தகத்தில் தொகுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. இவற்றைப் படித்தால் ராட் டையினிடம் மேலே கூறிய முறையில் நம்பிக்கை கொண்டுள்ள பிரதி நபரும், ஸ்தாபனமும் சங்கத்தின் இவ் வேலைத் திட்டங்களில் ஏதேனும் ஒரு வகையில் உதவ வேண்டியிருப்பது உணரப்படும்.

இச்சிறு நூலில் கொள்கைகளை விளக்குவது நம் நோக்கமல்ல. வேலைத் திட்டங்களின் முழு விவரங்களையும் விஸ்தாரமாக வர்ணிப்பதோ சங்கத்தின் சட்டங்களையும் விதிகளையும் தருவதோ சரியென்று கருதப்படவில்லை. அவையெல்லாம் சேர்க்கப் படுமானுல் புஸ்தகம் மிகவும் பெரிதாகிவிடும். கொள்கை விளக்கத்தையோ நுணுக்கமான விவரங்களையோ, விதிகளையோ அறிய விரும்பும் வாசகர்கள், 'காரியதரிசி, அகில பாரத சர்க்கா சங்கம், தலைமைக் காரியாலயம், சேவா கிராமம், வர்தா' என்ற விலாசத்திற்கு எழுதி அவற்றைச் சுலபமாகப் பெற்றுக் கொள்ளலாம். இங்கேயோ சர்க்கா சங்கத்தின் வெவ்வேறு வேலைத் திட்டங்களையும் அவற்றின் பகுதிகளின் தன்மையையும் மேலெழுந்தவாரியாகவும் ஆனுல் ஓரளவுக்குப் பூரணமாகவும் வாசகர்கள் அறிந்து கொள்வதற்கு உதவ வேண்டுமென்று முயற்சி செய்யப் பட்டிருக்கிறது.

நாம் எண்ணியிருந்ததைவிட புஸ்தகம் சிறிது பெரிதாகிவிட்டது. பல வேலைகளின் தொந்தரவுகளினுல் மிகவும் குறைந்த காலத்தில் இதைத் தயாரித்து அச்சிட வேண்டியதாயிற்று. ராவுவில் நடந்த சர்வோதய மகா நாட்டிற்கு முன்பே இதை வெளியிட வேண்டுமென்று விரும்பியிருந்தும் அவ்வாறு செய்ய முடியவில்லை. ஆயினும் சர்க்கா சங்கத்தின் மாகாண முகாம்கள் விரைவில் நடக்கவிருப்பதால் அந்த சந்தர்ப்பத்திற்காவது இது உபயோகப்பட வேண்டுமே என்ற எண்ணத்தினுல் இதை அவசர அவசரமாக வெளிக்கொணர வேண்டியதாயிற்று. சர்க்கா சங்கத்தின் வேலைத் திட்டங்களை சுருக்கமாகவேயாயினும் பூரணமாக விவரிக்க வேண்டுமென்ற எந்த நோக்கம் இதை எழுதுவதற்குக் காரணமாயிருந்ததோ, அது முற்றிலும் இந்நூலில் நிறைவேற முடியாது போயிருந்தாலும் அடுத்த பதிப்பிலாவது நிறைவேறுவதற்கு இந்தப் பதிப்பு உதவியாயிருக்குமென்று எதிர் பார்க்கப்படுகிறது. இதில் கொடுக்கப்பட்டுள்ள வேலைத் திட்டங்களை 3 பகுதிகளாகப் பிரிக்கலாம். அவை :

(1) அரசாங்கத்தின் உதவியின்றி செய்யக்கூடிய வேலை. அதாவது கிராம ஸேவை.

(2) சர்க்கா சங்கம் இதுவரையில் செய்துவந்த கதர் உற்பத்தி விற்பனை அல்லது நேரிடையான நிவாரண வேலை.

(3) அரசாங்கத்திடம் எதிர்பார்க்கப்படும் கதர்வேலை.

முதல் பகுதியில் அடங்கியுள்ள வேலைகளைச் சர்க்கா சங்கத்தின் ஊழியர்களும், அதே வகையில் வேலைசெய்யும் பிற நிர்மாண ஸ்தாபனங்களும் செய்தாக வேண்டும். 2-வது பகுதியின் வேலையை நம்பகமான ஸ்தாபனங்களின் மூலமாக பொதுமக்களே ஏற்று நடத்த வேண்டுமென்று கோரப்படுகிறது. 3-வது பகுதியிலோ அரசாங்கம் செய்யக் கூடியவை யாவை என்பது குறிப்பிடப்பட்டிருக்கிறது. இம்மூன்று பகுதிகளும் ஒன்றுடன் ஒன்று நெருங்கிப் சம்பந்தமுள்ளவை. இவற்றை மாற்றுவதோ கூட்டுவதோ குறைப்பதோ அவ்வப்பொழுதுள்ள நிலைமையையும் வசதியையும் பொறுத்திருக்கிறது.

சேவாகிராமம்,
வர்தா
13—3—49

கிருஷ்ணதாஸ் காந்தி,
காரியதரிசி,
அகில பாரத சர்க்கா சங்கம்.

பொருளடக்கம்

			பக்கம்
1.	சம்பூர்ண கிராம ஊழியர்	...	1
2.	உடை சுயதேவைப் பூர்த்தி செய்யும் கதர் ஊழியர்	...	3
3.	பொதுஜன ஊழியர்	...	5
4.	ஊழியர்	...	5
5.	சர்க்கா சங்கத்தின் உடை சுயதேவைப் பூர்த்தி ஸ்தலம்	...	8
6.	சொந்த நூலின் நெசவு	...	8
7.	நூல் நிபந்தனை	...	9
8.	நூல் செலாவணி	...	11
9.	பரவல் முறை	...	12
10.	உபகரணங்கள்	...	14
11.	தொழிற்பயிற்சிக் கூடம்	...	15
12.	சோதனைகள்	...	16
13.	கதர் வித்தியாலயம்	...	17
14.	முகாம்	...	19
15.	பிரசுரம்	...	20
16.	கண்காட்சி	...	21
17.	நூல் சந்தா	...	24
18.	கௌரவ ஊழியர்.	...	24
19.	உடை சுயதேவைப் பூர்த்தி அங்கத்தினர்	...	26
20.	நூற்பு மண்டலம்	...	27
21.	அங்கத்தினர்	...	30
22.	உற்பத்தியும் விற்பனையும்	...	30
23.	அத்தாட்சிப்பத்திரம்	...	31
24.	உடை சுயதேவைப் பூர்த்தி செய்வோரின் தொகையைப் பெருக்க உதவி	...	33
25.	உதவிபெறும் கதர் வித்தியாலயங்கள்	...	34
26.	அங்கீகாரம்	...	35
27.	கதரும் அரசாங்கமும்	...	36
28.	அரசாங்கப் பள்ளிக்கூடங்கள்	...	38
29.	சிறையில் நூற்பு	...	40

அகில பாரத சர்க்கா சங்கத்தின் வேலைத்திட்டம்

- உபகரண உற்பத்தி
  - சங்கத்தின் மூலமாக
  - பிறர் மூலமாக
- சுயதேவைப் பூர்த்தி
  - பரவல் ஏற்பாடு
  - ஒப்பம்
  - கிராம ஊழியர்
  - கதர் ஊழியர்
  - பொருள் உதவி
    - நூற்பவர்களுக்கு நெசவின் மீது
    - ஸ்தாபனங்களுக்கு
      - நெசவின் மீது
      - உடை சுய தேவைப் பூர்த்தி செய்வோரின் தொகையை ஆதாரமாகக் கொண்டு
- சோதனைகள்
  - பஞ்சுக் கிருத்தம்
  - முறைக் கிருத்தம்
  - உபகரணக் கிருத்தம்
  - ஈரிழை முறுக்கு
  - நூல் செலாவணி
- கதர் போதனை (வாழ்க்கைக் கலை தத்துவம்)
  - கதர் வித்தியாலயம்
  - முகாம்
  - தொழிற் பயிற்சிக் கூடம்
  - உதவி பெறும் வித்தியாலயம்
  - கண்காட்சி
- கதர் இலக்கியம்
  - மாதப் பத்திரிகை
  - புஸ்தக வெளியீடு
  - தினசரிப் பத்திரிகைகள்
- கதர் வினியோகம்
  - தொழிலாளருக்கு உதவி
  - வாடிக்கைக்காரர்களின் தேவைகள்
    - சங்கத்தின் மூலமாக
      - நூல் நிபந்தனை முறை
        - கதர் சுயதேவைப் பூர்த்தி ஸ்தலம்
        - நூற்பு மண்டலம்
      - தொழிலாளர்களுக்குக் கூலியின் பகுதியாகக் கதர் கொடுத்தல்
    - அத்தாட்சி பெற்றவர்களின் மூலமாக
      - லோக சேவகா ட்ரஸ்ட்
      - பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு ஸ்தாபனம்
- சர்க்கார் கதர் வேலைக்கு உதவி
  - நிர்வாகிகள் பயிற்சி
  - ஊழியர்
  - நிர்வாகம்
  - திட்டம்
    - கதர் சுயதேவைப் பூர்த்தி
    - பள்ளிக்கூடங்களில் நூற்பு நெசவு
    - சிறைகளில் நூற்பு நெசவு
    - உற்பத்தி
- இதர முயற்சிகள்
  - நூல் சந்தா
  - அங்கத்தினர்
  - கௌரவ ஊழியர்
  - கதர் சுயதேவைப் பூர்த்தி அங்கத்தினர்
  - விசேஷ கால ஏற்பாடு (சர்க்கா ஜயந்தி, நூற்புப் போட்டி முதலியவை)
  - எதிர்பாராதவை (பஞ்ச உதவி, அகதிகள் உதவி முதலியவை)

சர்க்கா சங்கத்தின் வேலைத்திட்டம்

'ராட்டையின் ஆதாரம் கிராமங்களே. சர்க்கா சங்கத்தின் அவா கிராமங்களிலெல்லாம் பரவி சம்பூர்ண சேவை செய்ய வேண்டுமென்பதாகும்.' இந்த லக்ஷியத்துடன் கடந்த 4 வருஷங்களில் சங்கத்தின் வேலைத்திட்டம் பல வகைகளில் மாற்றப்பட்டு வந்திருக்கிறது. அவற்றுள் முக்கியமானவை சில இனி விவரிக்கப்படும்.

1. சம்பூர்ண கிராம ஊழியர் :

கிராமத்தின் வாழ்க்கையென்பது ஒரே விஷயமாகும். கிராம வாழ்க்கை முழுவதையும் முன்னேறச் செய்ய வேண்டும். கதர், உடை சுய தேவைப் பூர்த்தி ஆகிய வேலைகளை சம்பூர்ண கிராமத்தின் முன்னேற்றத்திற்கு உதவும் சாதனங்களாகக் கருதி நடக்க வேண்டும். இக்கருத்துக்களை அமுலுக்குக் கொண்டு வருவதற்கு, தகுதி வாய்ந்த ஊழியர்கள் கிராமங்களில் போய் அமர வேண்டும். தேவையானால் அவர்கள் பள்ளிக்கூடங்களில் போதிக்க வேண்டும். ஊழியர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டிய விஷயங்கள் யாவையென்பதை காந்திஜி பின்வருமாறு விளக்குகிறார் :

"அவருக்கு தாய் பாஷையைத் தவிர மாகாண பாஷையிலும் பொது பாஷையிலும் பயிற்சி இருக்கவேண்டும். நாட்டின் பொருளாதார, ராஜீய, சமுதாய நிலைமை என்னவென்று தெரிந்திருக்க வேண்டும். உலகத்தின்முன் உள்ள பல பிரச்னைகளையும் அவர் அறிந்திருப்பாரானால் இந்தியா இப்பொழுது எங்கே உள்ளது, அது செல்ல வேண்டிய இடம் யாது என்பவைகளை அவர் புரிந்து கொள்ள முடியும். மேலும், அவர் எந்த கிராமத்தில் போய் தங்குகிறாரோ அவ்விடத்தைப் பற்றிய திட்டமான விவரங்களும் அவருக்குத் தெரிந்திருக்க வேண்டும். சங்கத்தின் 'காதி பிரவேசிகா' பரீக்ஷை வரையில் ஏற்படக்கூடிய முழு ஞானத்தோடு ராட்டையைச் செப்பனிடுவதற்குப் போதிய தச்சுவேலை, கிராமக் கைத்தொழில்களைப் பற்றிய அறிவு, வியவசாயம், பசு, எருது, ஆகியவற்றின் விவரங்கள், கிராமத் துப்புரவு, ஆரோக்கியம், உணவு ஆகியவற்றைப் பற்றிய ஞானம் ஆகியவை இருக்க வேண்டும். தையல் வேலையும் அவருக்குத் தெரிந்திருத்தல் மேலும் நல்லது. இவ்வளவெல்லாம் திறமையிருந்தும், அவர் நன்னடத்தை இல்லாமலும், துர்ப்பழக்கங்கள் உள்ளவராகவும் இருப்பாரானால் அவரால் கிராம வேலை சிறிதும் செய்யமுடியாது. ஆகையால் அவருடைய நடத்தை முற்றிலும் பரிசுத்தமானதாய் இருக்க வேண்டும்."

கிராம ஊழிய திட்டம் கிராமவாசிகளை சுய தேவைப் பூர்த்தி செய்வோராக்குவதற்கென வகுக்கப்பட்டதாகும். ஆகையால் இந்த கிராம ஊழியர் தாமும் தம் குடும்பத்தினருமாக வியவசாயம், நூற்பு, நெசவு ஆகிய உற்பத்தி வேலைகளில் ஈடுபட்டு உழைத்துத் தமக்காகும் மொத்தச் செலவில் குறிப்பிட்ட ஒரு பகுதியை சம்பாதித்துக்கொள்ள முடியவேண்டும்.

இவ்வாறு கிராமங்களில் இருந்து வேலை செய்யும் ஊழியர்களுக்கு இப்பொழுதுள்ள அதிகமான அகவிலையை உத்தேசித்து (4 பேருக்கு அதிகமில்லாத) அவரை அண்டியுள்ள அவருடைய குடும்பத்தினரையும் கருதி, ரூபாய் 30 முதல் ரூ. 100 வரையில் மாதச்செலவுக்குப் பணம் கொடுத்து வருவதென்று சங்கம் தீர்மானித்திருக்கிறது. 5 வருஷங்களுக்குள் சேவை ஸ்தலத்தில் மக்கள் அளிக்கும் நன்கொடையைக் கொண்டும், அங்கே ஆரம்பித்து நடத்தப்படும் தொழில்களில் ஏற்படும் மிச்சத்தைக் கொண்டும் ஊழியர் தம் செலவுக்காகும் பணம் முழுவதையும் சேர்த்துக் கொள்ள முடிய வேண்டுமென்று எதிர் பார்க்கப்படுகிறது. கிராம ஊழியர் தாம் வேலை செய்யுமிடத்தில் ஆரம்பித்து நடத்த விரும்பும் தொழில்களுக்குத் தேவையான முதல், பிற சாதனங்கள் ஆகிய வற்றை ஸ்தலத்திலேயே வசூலிக்கவும் சேமித்துக் கொள்ளவும் வேண்டும்.

கிராம ஊழியத்தில் ஈடுபட விரும்புகிறவர் அதற்கென உள்ள விண்ணப்பப் பத்திரத்தை சங்கத்தின் காரியாலயத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். கிராம ஊழியர், சங்கத்தின் வித்தியாலயத்திலோ, வேறு ஏதேனும் ஒரு ஸ்தலத்திலோ குறைந்தது 2 மாதம் தங்கி தன்னைப்பற்றிய சரியான விவரங்களை தெரியச் செய்வாரானல் சங்கத்திற்கு அவருடைய ஆற்றல்களும் திறமையும் தெரிய வருவதற்கு இடமுண்டாகு மாகையால் இவ்வேற்பாடு அவசியமானதென்று கருதப்பட்டிருக்கிறது. தேவையானல் வித்தியாலயத்தில் அவரை வைத்துக்கொண்டு அவருடைய பயிற்சியிலுள்ள குறைபாடுகள் போக்கப்படும். இதன் பிறகே அவர் கிராம ஊழியராக நியமனம் பெறுவார்.

சாதாரணமாக நியமனம் ஆன பிறகு சங்கம் விசேஷமான கட்டுப்பாடெதையும் அமல் நடத்துவதில்லை. எந்த கிராமத்தில் ஒருவருக்கு நிலம் முதலிய சொத்துக்கள் இருக்கின்றனவோ, அதே கிராமத்தில் அவரை தன் கிராம ஊழியராக நியமியாதிருப்பது அவசியமென்று கருதப்பட்டிருக்கிறது. சம்பளத்திற்கு நியமிக்கப்படும் ஊழியர்களையோ இம்முறையில் நியமிப்பதில்லையென்ற விதியே செய்யப்பட்டுள்ளது. நியமனம் பெற்றதிலிருந்து கிராம ஊழியர் தம் வேலைகளின் மாதாந்திர விவரங்களை சங்கக் காரியாலயத்திற்கு அனுப்பி வரவேண்டும்.

சர்க்கா சங்கத்தின் மாத வெளியீடான 'காதிஜகத்' பத்திரிகை கிராம ஊழியர்களுக்கு இலவசமாக அனுப்பப்பட்டு வரும். உடை சுயதேவைப் பூர்த்தி செய்வோரின் தொகையைப் பெருக்குவதற்கென சங்கம் அளித்து வரும் உதவியை ஊழியரும் தம் முயற்சிகளுக்காகப் பெற்றுக் கொள்ளலாம்.

2. உடை சுயதேவைப் பூர்த்தி செய்யும் கதர் ஊழியர்:

கூலிக்காக நூற்போரின் நூலைக் கொண்டு நடைபெறும் கதர் வேலையில் நூற்பவர்கள் கதர் உடுத்தவேண்டுமென்று வற்புறுத்தப் பட்டு வந்தது. கதர் சுயதேவைப் பூர்த்தி வேலையையோ தம்மிடமிருந்தே தொடங்கவேண்டும்; தாமே நூற்கவேண்டும். அதற்காக 'துனயி' அல்லது பன்னிப்பட்டைபோடும் முறையைப் பயின்று செய்துவரவேண்டும். இவ்வளவெல்லாம் செய்தபிறகும் உடை சுயதேவைப் பூர்த்தியில் நெசவு பிரச்னை முட்டுக்கட்டையாக இருந்து வருமாகையால் அதையும் போக்குவதற்குரிய உண்மையான வழி நெசவு சுயதேவைப் பூர்த்தியேயாகும். நூற்பவர் ஒவ்வொருவரும் தாமே நெய்துகொள்ளவும் வேண்டுமென்று நாம் வற்புறுத்தா விட்டாலும் ஊழியர்கள் மட்டுமாவது இதைச் செய்யும்படி வற்புறுத்தவே படுவார்கள். இதுவரையில் தராசையும், கணக்குப் புஸ்தகங்களையும், கஜக்கோல், கத்தறி ஆகியவற்றையும் கொண்டு கதர் வேலை செய்யப்பட்டு வந்தது. இப்பொழுது தாமே துனயி, நூற்பு, நெசவு ஆகியவற்றைச் செய்தும் வீட்டுக்கு வீடு அல்லது குறிப்பிட்ட ஸ்தலங்களில் இவ்வேலைகளை பிறருக்கு போதித்தும் இவற்றிற்கான காரணங்களை விளக்கிச் சொல்லியும் கதர் வேலையைச் செய்யவேண்டும்.

ஊழியர்கள் தாமே நெய்யவும் தொடங்குவார்களானல் புதிய நெசவுக்காரர்கள் தோன்ற முடிவதோடு இப்பொழுதுள்ள நெசவுக்காரர்களுக்கும் கைநூலை நெய்வதற்குத் துணிவு ஏற்படுமாகையால் நூற்பவர்களிலேயே சிலர் நெசவு வேலையைச் செய்ய முன்வருவார்கள். நெசவுக்கு உதவியாயுள்ள வேலைகளையும் அவர்கள் செய்யலாம். நூற்பவர்களுக்கு அவர்களின் நூலிலுள்ள குற்றங்களையும் எடுத்துச் சொல்லமுடியும். ஊழியர் தாமே உற்பத்தி செய்யும் தொழிலாளியாகிவிடுவாரானல் அவர் கிராமத்தவருடன் கிராமத்தவராக வேற்றுமையின்றிக் கலந்து வாழமுடிவதோடு அவரால் ஜாதிப்பூசல்களையும் போக்க இயலும்.

இந்த நோக்கத்துடன் சங்கம் வகுத்துள்ள ஒரு திட்டத்தின் படி சங்கத்தின் ஊழியர்களும் சங்கத்தின் விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கும் பிற ஊழியர்களும் நெசவில் பழக்கமுள்ளவர்களாய் ஏதேனும் ஒரு கிராமத்திலோ, நகரத்திலோ இருந்து

கொண்டு உடை சுயதேவைப் பூர்த்தியாளரின் நூலை நெய்து கொடுக்கவும் அந்தந்த ஸ்தலத்திலேயே நெசவை பிறரைக்கொண்டு ஆரம்பிக்கச்செய்து நடத்தவும் சித்தமாயிருந்தால் அவர்களுக்குச் சங்கம் நிர்ணயத்துள்ள விகிதப்படி கிடைக்கவேண்டிய கூலியைத் தவிர அவரை ஒரு உடை சுயதேவைப் பூர்த்தி ஊழியராகக் கருதி அவருடைய திறமையையும், அவருக்குள்ள குடும்பபாரத்தையும் அனுசரித்து ரூ. 10 முதல் ரூ. 40 வரையில் மாத உதவி அளிக்கப் பட்டு வரும்.

இந்த ஊழியர் சங்கத்தின் ஊழியரென்றே கருதப்படுவதால் க்ஷேமநிதியில் பணம் செலுத்துவதற்கும் அவருக்கு அனுமதியுண்டு.

இத்தகைய ஊழியர் சங்கத்தின் கட்டுப்பாட்டிலிருந்து கொண்டே வேலைசெய்து வரவேண்டும். ஆனால் ஊழியருக்குள்ள சுய ஆலோசனைத்திறன், சூக்ஷமமான அறிவாற்றல் ஆகியவற்றைக் கருதி சங்கம் ஒவ்வொரு ஊழியருக்கும் ஸ்தலத்தை தேர்ந் தெடுத்துக் கொள்ளுதல், திட்டம் வகுத்தல் முதலிய விஷயங்களில் சோதனைகள் நடத்துவதற்கு சந்தர்ப்பமளிக்கும். தம் ஸ்தலத்தைத் தீர்மானித்துக் கொள்வதற்கு ஊழியருக்கு உரிமையுண்டு ; ஆனால் சங்கம் விரும்புமானால் அவரை வேறு இடத்திற்கும் மாற்றலாம்.

ஊழியர் தொடக்கத்தில் தினம் 8 மணி நேரமும் ஸ்தலத் திலேயே நெசவு செய்யக்கூடியவர்கள் தயாரான பிறகு தினமும் குறைந்தது 4 மணி நேரமும், தாமே நெசவு செய்து வரவேண்டும். அவர் தனியராயிருந்தால் மாதத்திற்கு குறைந்தது ரூ. 25-ம், குடும்பியாயிருந்தால் குடும்பத்திலுள்ள வேலை செய்யத் தகுந்த பிரதி நபருக்கும் குறைந்தது 5 ரூபாய் வீதம் சம்பாதித்துக் கொள்ளவேண்டும். ஊழியருக்கு நன்றாக நூற்கவும் தெரிந்திருக்க வேண்டும். தம் எல்லையிலுள்ளவர்களுக்குத் தேவையான கதிர் செப்பனிடுதல் முதலிய வேலைகளை செய்துதருவதன் மூலமாகவும் அவர் சம்பாதிக்கலாம். நெசவு முதலிய வேலைகளுக்காக ஊழியருக்கு மாதத்திற்கு 8 அணா வாடகையையும் தறிக்கு வேண்டிய உப கரணங்களையும் சங்கம் கொடுத்து உதவி வரும். ஆனால் அவைகளைப் பழுது பார்ப்பதற்கு ஆகும் செலவுகளை ஊழியர் தாமே ஏற்றுக் கொள்ளத் தயாராயிருக்க வேண்டும். இவ்வாறு ஒன்றுக்கு அதிக மான தறிகளுக்குத தேவையான உபகரணங்களும் கொடுத்து உதவப்படக்கூடும்.

ஊழியர் உற்பத்தி விற்பனை ஆகிய வேலைகளில் தம் திறமையை ஈடுபடுத்த வேண்டுமென்று எதிர் பார்க்கப்படுகிறது. அவர் தம் அருகாமையிலுள்ள சுயதேவை நூற்புச் செய்வோரின் நூலை நெய்ய வும், அக்கம் பக்கத்திலேயே நெய்வித்துக் கொடுக்கவும் தம்மாலான முயற்சியையெல்லாம் செய்யவேண்டும்.

ஒவ்வொரு ஊழியரும் தம் எல்லைக்குள் தினமும் சராசரி 10 ச. கெ. கதர் தயாரிக்கப்பட்டு உபயோகமாவதற்கு வேண்டிய நூற்பையும், நெசவையும் கூடிய விரைவில் ஆரம்பித்து நடத்திவர வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறே வருஷத்தில் குறைந்தது 60 சிட்டம் நூல் சந்தா சங்கத்திற்காக வசூலித்துத் தவறுமல் அனுப்பிவரவேண்டும். இத்துடன் சுயதேவைப் பூர்த்தி ஊழியர், உடை சுயதேவைப் பூர்த்தி செய்வோர், அங்கத்தினர், கௌரவ ஊழியர் ஆகியோரின் தொகையையும் பெருக்க வேண்டும்.

3. பொதுஜன ஊழியர் :

சர்க்கா சங்கம் இதுவரையில் முக்கியமாக கதர் வியாபார (உற்பத்தி—விற்பனை) வேலையையே செய்து வந்திருக்கிறது. இந்த நேரிடையான நிவாரண வேலை இன்னும் சிறிது காலத்திற்கு அவசியமாகவே இருந்துவரும். ஆனால் இவ்வேலையை இப்பொழுது நம்பகமான (அத்தாட்சிபெற்ற) ஸ்தாபனங்களின் மூலமாக பொது ஜனங்களே ஏற்றுக்கொள்ளவேண்டுமென்பது சங்கத்தின் விருப்பம். ஏனெனில் சர்க்கா சங்கம் தன் புதிய திட்டத்தின் மூலமாகப் பரந்த முறையில் சம்பூர்ண சேவை செய்யப் போகிறது. இதில் வெற்றி ஏற்படுவதற்கு சங்கத்தின் லக்ஷ்யத்தைப் பரப்புவதற்கு உதவக் கூடியவர்களும் ஏதேனும் ஒரு இடத்தில் தனிப்பற்று இல்லாதவர்களுமான ஏராளமான ஊழியர்கள் தேவை. பௌத்த பிக்ஷுக்கள் தர்மசங்கத்தின் கட்டளையின்படி இந்தியாவிலும் வெளியில் பல நாடுகளிலும் சென்று புத்த பகவானுடைய உபதேசங்களைப் பரப்பி வந்ததைப்போல அவர்கள் சர்க்கா சங்கத்தின் கட்டளையை ஏற்று எந்த இடத்திற்கு வேண்டுமானாலும் சென்று பாபுவின் உபதேசங்களைப் பரப்பச் சித்தமாயிருக்க வேண்டும். இத்தகைய ஊழியர்கள் சங்கத்தின் எல்லா வேலைகளிலும் பழக்கமும் அனுபவமும் கொண்டவர்களாயிருக்க வேண்டும். சாதாரணமாக இப் பொது ஜன ஊழியர் சர்க்கா சங்கத்தின் ஏதேனும் ஒரு ஸ்தலத்துடன் தொடர்புள்ளவராய் தம் குடும்பத்துடன் சேர்ந்து வேலை செய்து வருவார். ஆனால் தேவையையொட்டி எங்கு வேண்டுமானாலும் போய் வேலை செய்யச் சித்தமாயிருப்பார்.

4. ஊழியர் :

இன்றைய நிலையில் கதர் ஊழியர் ஒரே திசையில் வேலை செய்து வருகிறாரென்று உணரப்பட்டு வருகிறது. இப்பொழுது வெறும் கதர் உற்பத்தியும், விற்பனையும் மட்டும் செய்வதோடு திருப்தியடைதல் சாத்தியமில்லை. இது மட்டுமல்ல, நிர்வாகம், பிரசாரம்

சோதனைகள், கதர்க்கலை போதனை ஆகியவற்றின் மூலமாகவும் அவர்களுடைய வேலை பூர்த்தியாய் விடுமென்று சொல்வதற்கில்லை. தம் நடத்தையின் மூலமாகவும் அவர்கள் பணியாற்றி வர வேண்டும். ஒவ்வொருவரும் தம் உடல், அறிவு, உள்ளம் ஆகியவற்றினால் மட்டுமின்றி தம் வாழ்க்கையின் மூலமாகவும் ஊழியம் புரிந்து வருதல் வேண்டும். ஆகையால் நிர்மாண வேலையின் பல்வேறு பகுதிகளையும், அவற்றை அமுலுக்குக் கொண்டு வருவதற்கு இருந்துவரும் வசதிகளையும் கருத்தில் கொண்டு சங்கம் கீழே வரும் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது.

"அகில இந்திய ஸ்தாபனங்களை ஒன்றாக இணைக்க வேண்டுமென்ற கருத்தொன்று தோன்றியிருக்கிறதே, அதற்குக் காரணமாயுள்ள முக்கியமான விஷயம் அவ்வாறு சேரும் ஒவ்வொரு ஸ்தாபனத்தின் டிரஸ்டி, அதிகாரி, ஊழியர் ஆகியோர் நிர்மாண வேலைகளை சம்பூர்ண நோக்குடன் பார்க்கவும், ஆலோசிக்கவும் வேண்டுமென்பதே. மேலும் தம் வாழ்க்கையையும் அதையொட்டி மாற்றிக் கொள்வார்களானால் வேலைக்கு பிரசாரத்தின் உதவி ஏற்படுவதோடு மட்டுமின்றி, செயலின் ஆதரவும் கிட்டும். இவ்வகையில் முன்னேற்றம் ஏற்படுவதற்கு சில ஜீவாதாரமான விஷயங்களை ஒவ்வொரு ஸ்தாபனத்தின் எல்லா அங்கத்தினர்களும், ஊழியர்களும் தாமே அமுலுக்குக் கொண்டு வருதல் அவசியமாகும். இவ்வாறு அமுலுக்குக் கொண்டு வருவதற்கென கீழே உள்ள 7 வேலைகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன.

1. மாதத்தில் குறைந்தது ஒரு நாள் கக்கூஸ் சுத்தம் செய்யவோ கிராமச் சுத்திவேலையை ஓரளவு செய்யவோ வேண்டும்.

2. முறையாக நூல் நூற்று வரவேண்டும்.

3. தாமோ, தம் வீட்டிலுள்ளவர்களோ நூற்ற நூலைக் கொண்டு தயாரித்ததோ, அல்லது அத்தாட்சி பெற்றதோவான கதரை உடுத்தவேண்டும்.

4. ஆனவரையில் கிராமக் கைத்தொழில் பண்டங்களையே உபயோகித்து வரவேண்டும்.

5. தாம் வசிக்குமிடத்தில் பசுவின் பாலை உபயோகிப்பதற்கு அதிக முயற்சி செய்யவேண்டும்.

6. வசதியுள்ள இடங்களில் தம் பிள்ளைகளுக்கு ஆதாரக்கல்வி அளிக்கச் செய்யவேண்டும்.

7. நாகரி எழுத்தும், உருது எழுத்தும் திராவிட பாஷைகளுள் ஒன்றின் எழுத்தும் கற்க முயலவேண்டும்.

மேலே உள்ள நிபந்தனைகள் இணைப்பை விரும்பும் எல்லா சங்கங்களுக்கும் உரியவையெனக் கருதப்படும். சர்க்கா சங்கத்தின்

இந்தக் கூட்டம் மேலே கூறப்பட்டுள்ள 7 நிபந்தனைகளையும் சங்கத்தின் எல்லா டிரஸ்டிகளும் ஏற்கவேண்டுமென்றும் எழுத்துப் பயிற்சியைப் பற்றிய கடைசி நிபந்தனையைத்தவிர எஞ்சிய 6 நிபந்தனைகளையும் எல்லா ஊழியர்களுமே ஏற்க வேண்டுமென்றும் தீர்மானிக்கிறது. இந்தக் கடைசி நிபந்தனை ஊழியர்களின் விஷயத்தில் கட்டாயமாயில்லாமலிருக்கலாம். ஏனெனில் சங்கத்தில் தம் தாய் பாஷையிலேயே அதிகப் பயிற்சியில்லாத பலர் இருக்கிறார்களாகையால் சங்கத்தின் ஊழியர்களுக்குக் கடைசி நிபந்தனை கட்டாயமானதாக இருக்கத் தேவையில்லை. அவர்களை இந்த நிபந்தனையை மட்டும் உசிதம் போல் அனுசரிக்கச் செய்யலாம்.''

தீர்மானத்தில் 7 நிபந்தனைகளை சங்கத்தின் விதிகளைப் போல் கருதி ஊழியர்கள் அனுஷ்டித்து வருதல் அவசியமென்று கூறப்பட்டிருக்கிறது. உண்மையில் இந்த விதிகள் சிரமமானவை யல்ல. இவற்றுள் சில சங்கத்தின் பழைய விதிகளே. ஆனால் மன உறுதியில்லாமையாலும் நடை முறையிலிருந்த சிரமங்களினாலும் இது வரையில் ஊழியர்கள் இவற்றில் தேவையான கவனம் செலுத்தாது இருந்து வந்தார்கள். ஆனால் இதே நிலைமை இனியும் இருந்து வரலாகாது. எல்லா விதிகளையும் சங்கத்தின் ஊழியர்கள் அனைவரும் துர்ப்பழக்கங்கள் இல்லாமலும், விழிப்புடன் இருந்துகொண்டும் அனுஷ்டித்து வரவேண்டுமென்று சங்கம் விரும்புகிறது. அவர்கள் தம் குடும்பத்தவரைத் தவறாமல் கதரையே உடுத்தச் செய்வதோடு கூடியவரையில் தம் குடும்பத்தினரை தம் கையை எதிர்பாராமல் கதர் சம்பந்தமான ஏதேனும் ஒரு மாறணில்லாத வேலையில் ஈடுபடுத்தவும் வேண்டும்.

ஊழியர்களின் ஊதியத்தைப் பற்றிச் சங்கம் திட்டமான விதியொன்றும் செய்யவில்லை. ஆயினும் சாதாரணமாக ரூ. 20 முதல் ரூ. 100 வரையிலென்று வரம்புகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. மேலும் இக்காலத்திய அகவிலை ஏற்றத்தைக் கருதி சம்பளத்தில் 25% பஞ்சப்படி கொடுப்பதென்ற எண்ணத்தினால் ரூ. 10 முதல் ரூ. 25 வரையில் அந்தந்த மாகாணத்தின் நிலைமைக்குத் தகுந்தாற் போல் கொடுக்கப்பட்டு வருகிறது. எந்த ஊழியருக்கு எவ்வளவு சம்பளம் கொடுக்க வேண்டுமென்பது அவருடைய திறமையையும் கதர்க்கலையில் அவர் தேறியுள்ள பரீக்ஷைகளையும் கருதி முடிவு செய்யப்படுகிறது. 'ஆபத்ஸகாய நிதி'த் திட்ட மொன்றையும் ஊழியர்களுக்கென சங்கம் நடத்தி வருகிறது. ஊழியர்கள் காயமாக்கப்படுவதற்கு முன் சிறிது காலத்திற்கு உறுதி செய்யப்படாமலே வேலையில் இருந்து வரவேண்டியிருக்கிறது.

5. சர்க்கா சங்கத்தின் உடை சுயதேவை பூர்த்தி ஸ்தலம் :

சங்கம் தன் முழு கவனத்தையும் உடை சுயதேவை பூர்த்தி வேலையிலேயே இனிச் செலுத்துவது என்று செய்துள்ள முடிவுக்கு சங்கத்தின் கிளைகளும் தம் உற்பத்தி விற்பனை ஸ்தலங்களை கூடிய விரைவில் உடை சுயதேவைப் பூர்த்தி ஸ்தலங்களாக மாற்றி விடு மென்பதே பொருளாகும். இம்மாதிரி மாற்றப்பட்ட ஸ்தலங்களி லுள்ள காரியாலயங்கள், வஸ்திராலயங்கள் ஆகியவற்றின் பெயர்கள் இப்பொழுது 'சர்க்கா சங்கக் கதர் காரியாலயம்' அல்லது 'வஸ்தி ராலய மெ'ன்றிருப்பதை, சர்க்கா சங்க உடை சுயதேவைப் பூர்த்தி ஸ்தலம் என்று மாற்றப்படும்.

கிளைகள் உடை சுய தேவைப் பூர்த்தி வேலைக்கு உதவுவதற் காகவே உற்பத்தியைச் செய்து வரவேண்டும். அப்பொழுது சுய தேவைப் பூர்த்தியாளரின் நூலை நெய்வித்துத் தருவதையும் தொடர்ந்துசெய்துவர இயலும். இப்பொழுதைக்கு ஒவ்வொரு கிளையும் செய்யக்கூடிய உற்பத்தி அந்தந்தக் கிளையின் சுய தேவைப் பூர்த்தி வேலையைப்போல் 5 மடங்குக்கு அதிகம் இருக்கக் கூடா தென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

உடை சுயதேவைப் பூர்த்தி ஸ்தலங்களில் கீழ்க்கண்ட வேலை நடத்தப்பட்டு வரும் :—

1. சம்பூர்ண நூற்பிலிருந்து தொடங்கி நெசவு வரையில் கூடிய வரையில் எல்லா வேலைகளையும் செய்தல்.

2. நூற்பவர்களுக்குப் பஞ்சும் உபகரணங்களும் தருவித்துத் தந்து அவற்றின் விவரங்களைக் குறித்து வைத்துக்கொள்ளுதல்.

3. உபகரணங்களைச் செப்பனிட்டுத் தருதல்.

4. துனையியும், நூற்பும் போதித்தல்.

5. கௌரவ ஊழியரையும், அங்கத்தினர்களையும் உடை சுயதேவைப் பூர்த்தி செய்வோரையும் பதிவுசெய்து, அவர்களின் நூலை நெய்வித்துத் தருதல்.

6. நூல் சந்தா சேர்த்தல்.

7. நூற்பவர்களிடம் சொந்த நூற்பில் தயாராகும் நூல் போக இன்னும் தேவையாயுள்ள நூலை நூல் நிபந்தனைப்படி விற்றல்.

8. கதர் சம்பந்தமான நூல்களை விற்றலும் மக்களிடையே அவற்றைப் படிக்கும் ஆவலை உண்டாக்குதலும்.

6. சொந்த நூலின் நெசவு :

1943-லிருந்து கைநூலை நெய்விக்க ஏற்பாடு செய்வது மிகவும் சிரமமாயிருந்தது. இப்பொழுது சிரமம் சிறிது குறைந்திருப்பது போல் தோன்றுகிறது. ஆனால் ஆலை நூலையே நெய்துவருவோர்

வேறு வழியில்லாதபொழுதுதான் கைநூலை நெய்ய ஏற்கிறார்கள். ஆகையால் நெசவாளர்கள் சிறிதும் தயங்காமல் தம் நூலை ஏற்று நெய்ய முன்வரும்படியாக கதர் அன்பர்கள் தம் நூலைச் சிறந்த வகையில் தயாரிக்கவேண்டும். இதற்கு ஈரிழை முறுக்கு நூல் தயாரிப்பது ஒன்றே வழியென்பது விஷயமறிந்தவர்களின் முடிவான அபிப்பிராயமாகும். ஈரிழை நூலை நெய்வது வெகு சுலபமென்பது அனுபவமுமாகும். சங்கம் சேவா கிராமத்தில் 1947-ம் வருஷத்தின் சர்க்கா ஜயந்தி சமயத்தில் சமுதாய நெசவுக்கு ஏற்பாடு செய்திருந்தது. அது நல்ல பயனும் தந்தது. ஈரிழை முறுக்கு நூல் இருக்குமானால் பாவு தோய்வதிலுள்ள சிரமம் எல்லாம் நீங்குவதோடு நூற்பில் சிறிது பழக்கமுள்ளவர்களும் இன்னும் கொஞ்சம் சிரமம் எடுத்துக்கொண்டால் நல்ல துணி நெய்துவிடலாம். ஈரிழை முறுக்கைக்கொண்டு நெசவு செய்யும் ஏற்பாட்டிற்கு இப்பொழுதுள்ள பரம்பரை நெசவாளர்களின் தயவு தேவையேயில்லை. ஆகையால் கதர் அப்பொழுது சம்பூர்ணமாக சுயதேவைப் பூர்த்தி செய்வதாகிவிடும்.

ஆனால் இதன் பொருள் நெசவுத் தொழிலாளரின் மூலமாக நடைபெறும் கதர் நெசவை, நாம் முற்றிலுமே நிறுத்திவிட வேண்டும் என்பதல்ல. இதுவரையில் சங்கத்தின் ஸ்தலங்களுக்கு வரும் நூலை நெய்வித்துத் தர, கூடியவரையில் முயற்சி செய்யப்பட்டு வந்ததைப் போலவே இனியும் செய்யப்பட்டு வரும். சங்கத்தின் ஸ்தலங்களுக்கு நூல் வந்து சேருவதிலும் அங்கே அதை நெய்வித்துத் துணியாக உடமைக்காரர்களுக்குத் திரும்ப அனுப்பி வைப்பதிலும் அதிக காலம் ஆகிவிடுகிறது என்பது தெரிந்ததே. ஆகையால் அந்தந்த இடத்திலேயே நெசவுக்கும் ஏற்பாடு செய்தல் அவசியமாகும். அத்தாட்சி பெற்ற உற்பத்தி, விற்பனை ஸ்தலங்களின் மூலமாகவும், நூற்பு மண்டலங்களின் மூலமாகவும், சுயதேவை ஸ்தலங்களின் மூலமாகவும் கௌரவ ஊழியர்களின் கூட்டுறவைக்கொண்டும் சுயதேவைப் பூர்த்தி செய்யும் ஊழியர்களின் ஆதரவின் மீதும் இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு முயற்சி நடந்துவருகிறது.

7. நூல் நிபந்தனை :

இது கதர் உடுத்துவோருக்கு அன்றாட வேலைகளுடன் சம்பந்தமுள்ள விஷயமாகும். இந்த மாறுதல் செய்யப்பட்டது ஏன்? இதற்குக் காரணமாயுள்ள கருத்து யாது? இவற்றை காந்திஜியின் சொற்களிலேயே இங்கே எடுத்துக் கூறுதல் உசிதமாகும் :—

"சுதந்திர இந்தியாவில் யந்திரங்களைக் கொண்டு கைத் தொழில்கள் நடத்தப்படுமானால் சமத்துவத்தையும் அமைதியையும்

ஸ்தாபிப்பது அசாத்தியமே. இத்தகைய சுதந்திரத்தினால் இந்தியாவின் கோடிக்கணக்கான மக்களுக்குச் சுகமோ அமைதியோ கிட்டாது. இத்தகைய சமுதாயத்தில் பலரை உறிஞ்சுவதன் மூலமாக ஒரு சிலர் செல்வம் பெற்று வாழ்வார்கள். கீழ்ப்படியிலுள்ள மக்களுக்கு அமைதியும் ஆனந்தமும் கிட்ட வேண்டுமானால் அதற்கு அஹிம்சை அல்லது ராட்டைக் கைத்தொழிலே வழியாகும். ஏனெனில் ராட்டையென்பது வாழ்க்கையின் சம்பூர்ண தத்துவஞானத்தைக் குறிப்பதோடு அஹிம்சையின் நிதர்சனமான அறிகுறியும் ஆகும் ''.

இதைப்பற்றி காந்திஜி அருளிய சூத்திரம் பின்வருமாறு :—

'' நூற்பவர் அறிந்து உணர்ந்து நூற்க, நூற்போர் கதரணிக, அணிவோர் தவறாமல் நூற்க ''.

இந்த சூத்திரத்திற்கு அவரே பின்வரும் விளக்கமும் கூறியிருக்கிறார் :—

(1) '' உணர்ந்து, அறிந்து நூற்பதென்றால் ராட்டை அல்லது நூற்பு அஹிம்சையைக் குறிக்கிறது என்று கவனித்தால் தெரியக் கூடும், (2) நூற்பின் பொருள், காட்டிலிருந்து பருத்தியைப் பொறுக்கிக் கொணர்தல், கைமணையில் அரைத்து பஞ்சுவேறு கொட்டை வேறாகப் பிரித்தல், பஞ்சைக் கொட்டுதல், பட்டை சுருட்டுதல் விரும்பிய எண்ணுள்ள நூலாக நூற்றல், ஈரிழையாக வீசுதல் ஆகிய அனைத்துமாகும்.''

இன்று கதர் அன்பர்கள் பொதுவாக ஏழைகளுக்கு ஏதோ உதவி ஏற்படுகிறது என்ற எண்ணத்தினால் கதரை உடுத்துவதோடு திருப்தியடைந்து விடுகிறார்கள். ஆனால் இந்தத் திருப்தி நீடிக்கக் கூடியதல்ல; நீடிக்கவும் கூடாது. சுதந்திர இந்தியாவில் ஏழைகளின் நிலைமை வரவர திருந்தத் திருந்த ஜீவனத்திற்காக நூற்பவர்கள் குறைந்து போய் ஒரு காலத்தில் இல்லாமலே போய்விடுவார்கள். அப்பொழுது நூற்றுக் கொண்டிருப்பவர்கள் 'அறிந்து உணர்ந்து' நூற்பவர்களாகவே இருப்பார்கள். ஒரு சிலர் பலரை உறிஞ்சுவதைத் தடுப்பதற்காகவே அந்த நூற்பு நடந்து வரும். அஹிம்சையில் அமைந்த சமுதாயத்தை நிறுவும் பொருட்டு இவ்வகை நூற்பு நடப்பதோடு பெருகவும் வேண்டும். இதன் பொருட்டு கதரின் விலையின் ஒரு பகுதியைத் தாமோ தம் குடும்பத்தவரோ, நண்பர்களோ நீடித்து இருந்து வரும் வேலைக்காரர்களோ நூற்றதாயுள்ள நூலாகக் கொடுக்கவேண்டுமென்று சர்க்கா சங்கம் ஒரு நிபந்தனையை ஏற்படுத்தி யிருக்கிறது.

நிபந்தனையில் கண்டுள்ள நூலின் அளவைச் சிறிது சிறிதாக அதிகமாக்கிக் கொண்டே போய் இப்பொழுது நடைபெறும் உற்

பத்தி விற்பனை முழுவதையுமே சுயதேவைப் பூர்த்தி வேலையாக மாற்றிவிடவேண்டுமென்ற எண்ணமும் உண்டு.

8. நூல் செலாவணி :

இந்தியாவில் தொழில்களுக்கு ஏற்பட்டிருக்கும் பெரிய பஞ்சத்தில் கோடிக் கணக்கான மக்களுக்கு ராட்டை ஒன்றைத் தவிர வேறு தொழில் எதையும் கொடுப்பது சிரமமாகத் தோன்றுகிறது. இந்த நிலைமை நீடிக்கும் வரையில் சொந்த உபயோகத்திற்காக நூற்பவர்களோடு கூலிக்காக நூற்பவர்களும் இருந்துதான் வருவார்கள். அவர்களுடைய இந்த அதிகப்படியான நூலை விற்றேயாக வேண்டும். ஏனெனில் நூலை விற்றுத்தான் அவர்கள் ஜீவனத்திற்கு வேண்டிய பிறபொருள்களை வாங்கவேண்டி யிருக்கிறது.

நூல் செலாவணி ஏற்படுமானால் ஒவ்வொரு வீடும் ஒருநாணயச் சாலையாகிவிடும். அவரவர் தமக்குத் தேவையான பணத்தைச் சிருஷ்டி செய்து கொள்ளலாம். உலோகத்தில் செய்த பணம் காசுகளோ, காகிதத்தில் அச்சடித்த நோட்டுளோ உண்மையான நாணயங்களாக மாட்டா. அவைகளுக்குள்ள மதிப்பு இயற்கையான மதிப்பல்ல. சர்க்கார் அவற்றின்மீது முத்திரை யிடுவதனாலேயே அவைகளுக்கு மக்கள் மதிப்பளிக்கிறார்கள்.

இந்தியா கிராமங்களால் அமைந்தது. சங்கம் இந்நாடு கிராமங்களினாலேயே சிறப்புற்றோங்க வேண்டுமென்று விரும்புகிறது. கிராமங்கள் கூடியவரையில் -பிறர் கை பாராமல் வாழ முடிய வேண்டு மென்பது அதன் அவாவாகும். இத்தகைய கிராமங்களில் கொடுக்கல் வாங்கல்களுக்கு இயற்கைக்கு முரணான நாணயச் செலாவணியை நம்பிக்கொண்டிருப்பதைவிட கிராமங்களிலேயே உற்பத்தியாகும் பொருளொன்றைக் கொண்டு செலாவணியை நடத்தி வருதல் விரும்பத்தக்கதாகும். அந்தப் பொருள் எவரும் செய்யக் கூடியதாயும், சேர்த்து வைத்துப் பாதுகாப்பதில் சிரமமில்லாமலும் அதன் மதிப்பில் அதிக ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுவதற்கு இடமில்லாமலும் இருக்கவேண்டும். சர்க்கா சங்கத்திற்கு இதுவரையில் ஏற்பட்டுள்ள அனுபவத்திலிருந்து நூலினிடமே இந்த குணங்கள் இருப்பதாகத் தெரிவதால் அதைச் சுலபமாகச் செலாவணிக்குக் கொண்டு வரலாம். காந்திஜியும் இந்த ஆலோசனைக்கு ஆசி அளித்திருக்கிறார்.

நூல் செலாவணியை வழக்கத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்றால் நூலை வாங்கிக் கொண்டு அதற்குப் பிரதியாக கிராமங்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களையெல்லாம் கொடுக்கக் கூடிய கடைகள் ஏற்பட வேண்டும். இந்தக் கடைகளில் எல்லா சாமான்களையும் நூலைத்தவிர வேறு எதற்கும்

விற்கக் கூடாது. இவ்வாறு நடைபெறுமானால் நூற்பவர்களுக்குத் தாம் நூற்கும் நூலின் ஒவ்வொரு இழையின் மதிப்பும் தானாகவே தெரியவரும்.

நூல் செலாவணியை அமுலுக்குக் கொண்டுவரும் நோக்கத்துடன் சங்கம் பின்வரும் நடவடிக்கைகளை எடுத்து வந்தது. சங்கம் நடத்திய இந்தச் சோதனைகளின் அனுபவம் ஊக்கம் தருவதாகவே இருக்கிறது.

(1) ஒரு ரூபாய் நூலை வாங்கிக் கொண்டு அதற்குப் பிரதியாக ரூ. 1-4-0 மதிப்புள்ள கதர் கொடுத்தல்.

(2) ஒரு சிட்டத்திற்கு இவ்வளவென்று அதன் அளவைக் கழித்துக் கொடுத்தல்.

(3) கதரின் விலையை ரூபாயில் குறிப்பிடுவதோடு சிட்டங்களாகவும் குறித்தல்.

9. பரவல் முறை :

1943-லேயே வேலையைப் பரவல் முறையில் அமைப்பது பற்றிப் பிரஸ்தாபம் எழுந்தது. அந்தக் காலத்தில் இந்தப் பேச்சு எழுந்ததற்குக் காரணம் சர்க்கார் சர்க்கா சங்கத்தின் மீது அடக்குமுறை நடவடிக்கைகள் எடுக்குமோ வென்ற பயமிருந்ததே. ஆனால் இந்தச் சொல் வழக்கில் வந்து விட்டது. 1944-க்குப் பிறகு இதையே வேறொரு வகையில் காந்திஜி மீண்டும் கொணர்ந்தார். கதர் வேலை எல்லா இடங்களிலும் பரவ வேண்டுமென்றால் அதை ஒரே இடத்திலிருந்து நடத்தும்பொழுது நம் நோக்கம் ஒரு பொழுதும் நிறைவேறாது என்று அவர் உறுதியாக அபிப்பிராயப்பட்டார். சங்கத்தின் ஊழியர்கள் பலரும் கணக்கு வழக்கு வேலைகளிலேயே சிக்கியிருப்பதால் கிராமங்களுடன் தொடர்பு கொள்ளும் விஷயத்தில் அவர்களால் எதுவும் செய்ய முடிவதில்லை. அவர்கள் இவ் வேலையிலிருந்து விடுபடுவார்களானால் சங்கத்தின் கொள்கைகளைப் பரப்புவதிலும், அதை மேலும் போஷித்து வளர்ப்பதிலும் அவர்களால் எவ்வளவோ உதவி ஏற்படக்கூடும். கதர் வேலையின் முக்கியமான பகுதி உடை சுய தேவைப் பூர்த்தியே. அது நடைபெறுவதற்கு பரவல் முறை அவசியமாகும். வீட்டிற்கு வீடு சிறிய ஸ்தலமொன்றில் நூல் நூற்கப்பட்டு அந்த இடத்திற்குத் தேவையான கதர் முழுமையும் அங்கேயே நெய்யப்படுவதென்றால் கதர் ஊழியருக்குத் தம் நோக்கப்படி கதர் வேலையைச் செய்து வர சுதந்திரம் இருத்தல் அவசியமாகும். நாடு முழுமைக்கும் ஒரே ஸ்தலத்திலிருந்தோ, மாகாணம் முழுமைக்கும் மாகாணத் தலைமையிடத்திலிருந்தோ வேலைகளை இயக்கி நடத்த வேண்டி வரும்பொழுது மேற்கூறிய நோக்கம் நிறைவேறுவது

சாத்தியமில்லை. ஆனால் உண்மைப் பரவல் ஏற்பாட்டைச் சம்பூர்ண மாக அமுலுக்குக் கொண்டு வருவதற்குமுன், தாற்காலீக ஏற்பாடாக ஒன்றை இப்பொழுது ஏற்றல் அவசியமாகும். சங்கம் இதுவரை யில் வகுத்ததும் அமுலுக்குக் கொணர்ந்ததுமான பல வேலைத் திட்டங்களிலும் அடங்கியிருந்த நோக்கமிதுவே.

பரவல் முறை யென்ற தலைப்பிட்டு காந்திஜி கட்டுரையொன்று எழுதியிருந்தார். அதை இங்கே எடுத்துத் தருவதால் பரவல் முறையை ஏற்பதில் சங்கம் கொண்டுள்ள நோக்கம் சரியாக விளங்கும்:—

"பரவல் ஏற்பாடே கதரின் உயிர் ஸ்தானமாகும். இந்தியா வின் 7 லட்சம் கிராமங்களிலும் கைராட்டைகளும், கைத்தறிகளும் இயங்க வேண்டுமென்றும் இந்தியாவின் கோடிக்கணக்கான மக்கள் கதரே உடுத்தவேண்டுமென்றும் ஆலைகள் பெயருக்குக்கூட இருக்கக் கூடாதென்றும் சங்கம் விரும்புகிறது.

"இப்பொழுது எந்தெந்த மாகாணங்கள் பிரிந்து சுதந்திரமாய் வேலை செய்ய விரும்புகின்றனவோ அவை அவ்வாறு செய்வதற்குரிய சமயம் வந்துவிட்டது. அவைகளினால் முடியவில்லை என்றால் ஜில்லாக்களும், ஜில்லாக்களாலும் முடியாதென்றால் தாலுக்காக்களும் அவற்றினாலும் சாத்தியமில்லை யென்றால் கிராமங்களின் சிறு சிறு தொகுதிகளும், அதுவுமில்லை யென்றால் தனித்தனி கிராமமும் சுதந்திரமாகி விடவேண்டும். ஒவ்வொரு மனிதருக்கும் இதிலுள்ள சுதந்திரம் இருக்கவே யிருக்கிறது. இங்கே இது எப்படி நடக்கு மென்ற கேள்வியே எழக்கூடாது. சர்க்கா சங்கத்தின் அதிகாரத்தி லுள்ளவர்கள் சங்கத்தின் காரியதரிசிக்கு விவரமாக எழுதுவார்க ளானால் இவ் விஷயம் முடிவு செய்யப்படும். எவர்களிடம் சங்கத் தின் சொத்து இருக்கிறதோ அவர்கள் அதைத் திருப்பித் தந்து விட ஏற்பாடு செய்ய வேண்டும். எவர்கள் சங்கத்தின் கொள்கையை ஏற்பார்களோ அவர்களின் விஷயத்தில் கொள்கையைப் பற்றிய கட்டுப்பாடு இருந்து வரும். இந்தக் கட்டை ஏற்றேதானாக வேண் டும் என்ற நிர்ப்பந்தம் எவருக்கு மில்லை. அனுஷ்டிப்பவருக்குத் தானே மதக்'கட்டுப்பாடு. மதமும் ஒன்றுதான் என்பதல்ல. வேர் ஒன்றாயிருந்த போதிலும் கிளைகள் பல இருக்கலாம். பல கிளைகளி லும் உள்ள இலைகள் எத்தனையோ. ஒருமையில் பன்மை யென் பதே உலகத்தின் அழகிய விதி அல்லது சட்டமாகும். ஆகையால் பரவல் முறைக்கு எவ்வளவு ஊக்கமளிக்க முடியுமோ அவ்வளவை யும் அளிப்பதையே சங்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது. கிளை களின் வேலை முறை அவை கூடிய விரைவில் சுதந்திரமாவதற்கு உகந்த முறையில் இருக்க வேண்டும்."

பரவல் முறையின் வெவ்வேறு பிரச்னைகளையும் பற்றி ஆராய்ந்ததில் அனைவரும் ஒப்பியவற்றுள் முக்கியமானவை பின்வருமாறு :—

(1) பரவல் முறையில் பிரிந்து போய் வேலை செய்யும் ஒவ்வொரு பகுதியின் வேலைகளும் சர்க்கா சங்கத்தின் விதிகளின்படி நடந்து வரவேண்டும்.

(2) ஒரு பிரிந்த ஸ்தலத்தில் உற்பத்தியாகும் எத்தகைய கதரும் வேறு மாகாணத்திற்கோ வேறு பகுதிக்கோ போகக்கூடாது என்பதோடு வேறு மாகாணம் அல்லது பகுதியிலிருந்தும் எந்த வகைக் கதரும் பிரிந்த பகுதிக்குள் வரக்கூடாது.

(3) பிரிந்து போன பகுதியின் நோக்கம், அதன் எல்லைக்குள் உள்ள ஒவ்வொரு கிராமத்தின் முன்னேற்றத்தின் பகுதியென உடைசுய தேவைப் பூர்த்தியை ஏற்று அந்தந்த இடத்திலேயே ராட்டையில் நூல் நூற்று, நூற்ற நூலை ஆங்காங்கு நெய்விப்பதோடு நெய்த துணியை ஸ்தலத்திலேயே உபயோகிப்பதாயும் இருக்க வேண்டும்.

(4) பரவல் வேலையை நடத்தி வரும் ஸ்தாபனமோ, நபரோ கிராமவாசிகளின் டிரஸ்டி அல்லது பொறுப்பாளியாக இருக்க வேண்டுமே தவிர நகர வாசிகளின் பொறுப்பை ஏற்றவரைப்போல் இருக்கக் கூடாது.

(5) பிரிந்து போன ஸ்தலத்தின் எல்லைக்குள் சர்க்கா சங்கத்தின் எல்லையில் எவருக்கும் அத்தாட்சிப் பத்திரம் அளிக்கப்படமாட்டாது. பிரிந்துபோன பகுதியினரும் தாம் எவருக்கும் அத்தாட்சிப் பத்திரமளிக்காமல் எந்த நபர் அல்லது ஸ்தாபனம் குறிப்பிட்ட ஒரு ஸ்தலத்தில் கதர் வேலை செய்ய விரும்பினாலும் அந்தத் ஸ்தலத்தில் அவர்களையும் பரவல் கொள்கைப்படி வேலை செய்யத் தூண்ட வேண்டும்.

(6) பிரிந்த பகுதியின் வேலைப் பொறுப்பை ஏற்பவர் சர்க்கா சங்கத்தின் டிரஸ்டியாக இருத்தலாகாது.

(7) தொழிலாளர் ஊழிய நிதியின் தொகை பிரிந்து வேலை செய்யும் ஸ்தாபனத்தினிடமே இருக்கும். அதை அந்த ஸ்தாபனம் சங்கத்தின் தொழிலாளர் ஊழியர் நிதியின் விதிகளின்படி நிர்வகித்து வர வேண்டும்.

10. உபகரணங்கள் :

முடியுமானால் ஒவ்வொரு கிளையிலும் சங்கத்தின் சார்பில் ஒரு சிறந்த உபகரண உற்பத்திச் சாலை அமைத்து நடத்திவர வேண்டுமென்பது சங்கத்தின் நோக்கமாகும். இப்பொழுது பல கிளை

களில் உபகரண உற்பத்திச்சாலைகள் நடத்தப்பட்டு வருகின்றன. ஆனால் அவைகளிலெல்லாம் சிறந்த தொழில் திறமைக்கு வேண்டிய ஏற்பாடுகளை முற்றிலும் செய்ய இயலவில்லை. இதற்கான முயற்சியை சங்கம் செய்துகொண்டுதான் வருகிறது. இதைத் தவிர சுதந்திர மாகவே உபகரண உற்பத்திச்சாலைகள் தோன்றி வேலை செய்ய வேண்டுமென்பதும் இப்பொழுதே உள்ள உற்பத்திசாலைகளில் இன்னும் சிறந்த முறையில் உற்பத்திசெய்ய வேண்டுமென்பதும் சங்கத்தின் விருப்பமாக இருப்பதோடு இவைகளுக்குச் சங்கம் தேவையான உதவிகளையும் அளித்து வருகிறது. 2 வருஷங்களாகச் சங்கம் உபகரண மகா நாடு ஒன்றைக் கூட்டிவருகிறது. இந்த மகா நாடுகளில் சங்கத்தின் உபகரண உற்பத்திச் சாலைகளின் பிரதிநிதி களும் வெளி உற்பத்திச் சாலைகளின் பிரதிநிதிகளும் ஒன்றுகூடி உபகரணங்களைப் பற்றிய பல்வேறு பிரச்னைகளையும் பற்றி ஆலோசனைகளும் சர்ச்சைகளும் நடத்தி வருகிறார்கள். சோதனை களின் விஷயமாகவும் இந்த மகா நாட்டில் ஆலோசனை நடத்தப் படுகிறது. உபகரணங்கள் உற்பத்தி செய்தல், செய்வித்தல் ஆகிய வற்றிலும் சங்கத்தின் நோக்கம் சுயதேவைப் பூர்த்தி செய்வதே யாகும். ஒவ்வொரு கிராமத்திலும் தயாரிக்கக் கூடிய உபகரணங் களையே உபயோகித்தல் கதரின் உண்மையான நோக்கம் நிறை வேறுவதற்குப் பெரிதும் உதவி செய்யக்கூடும். இந்த எண்ணம் சங்கத்திற்கு எப்பொழுதுமே இருந்து வந்திருக்கிறது. துணித் தொழிலுக்குத் தேவையான எல்லா உபகரணங்களையுமே தம் உற்பத்திச் சாலைகளில் தயாரித்துக் கொள்வதற்குச் சங்கம் முயற்சி செய்து வருகிறது.

11. தொழிற் பயிற்சிக் கூடம்:

நூற்பில் ஜீவனத்திற்குத் தேவையான கூலி கொடுக்கவேண்டும் என்ற கொள்கையை அமுலுக்குக் கொண்டுவருவதற்குச் செய்யப் பட்ட முயற்சியிலிருந்து தொழிற்கூடத்தைப் பற்றிய கற்பனை உதய மாயிற்று. தொழிற்கூடமென்றால் நூற்பைத் தொழிலாக ஏற்றுச் செய்துவருகிறவர்களும், செய்ய விரும்புகிறவர்களும் ஒருங்கே சேர்ந்து வேலை செய்வதற்கென அமைந்துள்ள இடமாகும். தொழிகூடத்தில் புதிதாக நூற்பைக் கற்க விரும்புகிறவர்களுக்கு அதை போதிப்பதற்கும், ஏற்கெனவே நூற்கத் தெரிந்தவர்களுக்கு அவர்களின் திறமையைப் பெருக்கி வாழ்க்கைக்கூலி பெறுவதற்குத் தகுதி பெற செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இந்த போதனையை வீடு வீடாகச் சென்று நடத்துவதைவிட நூற்போர் பலரை ஒரே இடத்தில் கூட்டி போதிப்பதில் சௌகரியமிருக்கிறது. இவ்வாறு தொழிற்கூடத்தில் வந்துகூடும் தொழிலாளிகள் தம் ஜீவனத்திற்கு வேண்டிய வருமானத்தைப் பெறுவதற்கு உதவி

யாகும் முறையில் நூற்புத்தொழிலை கற்பதோடு துப்புரவு, ஒழுங்கு, கால உணர்ச்சி, கட்டுப்பாடு, நேரிய நடத்தை, மரியாதையான பேச்சு, கதர் உணர்ச்சி, ஆரோக்கிய அறிவு ஆகியவற்றையும் பெற்று முன்னேற வேண்டுமென்பதும் நோக்கமாகக் கொண்டு வேலை செய்யப்பட்டு வருகிறது. தொழிலாளரின் வேலைத் திறமையும் பண்பாடும் ஏக காலத்தில் வளர்ச்சிபெற வேண்டுமென்பது தொழிற்கூடம் நடத்துவதன் நோக்கமாகும். உற்பத்தி ஸ்தலங்களிலும், பஞ்சத்தால் அவதிப்பட்டவர்களிடையிலும், அகதிகளினிடையிலும் வேலை செய்வதற்கு திட்டங்கள் வகுக்கும்பொழுது நூற்புத் தொழிற்கூடங்களை முன்மாதிரியாகக்கொண்டு வகுப்பதில பெருத்த சௌகரியமிருக்கிறது. சங்கம் தன் அனுபவத்திலிருந்து தொழிற்சாலைக்கு வேண்டிய வேலை முறைகளையும் சிறிதும் பெரிதுமான பல விஷயங்களையும் தயாரித்திருக்கிறது. அவற்றையெல்லாம் "அகில பாரத சர்க்கா சங்க வரலாறு"* என்ற நூலில் பார்க்கலாம்.

12. சோதனைகள் :

1926-ல் சோதனைகளின் மூலமாக அதிக உற்பத்தியைக் கொடுக்கக் கூடியதும் வீடுகளிலேயே உபயோகிக்கத் தகுந்தவாறு எளிய முறையில் அமைந்துள்ளதுமான ராட்டையொன்றைக் கண்டு பிடிப்பதற்கு ஒரு லக்ஷ ரூபாய் இனுமளிப்பதென்று ஏற்பாடாயிற்று. இப்பொழுது அந்த இனும் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டுவிட்டது. ஆனுல் இத்தகைய ராட்டைக்கு அக்காலத்தில் இருந்துவந்த தேவை இப்பொழுதும் இருந்துதான் வருகிறது. இதைத் தவிர வீட்டுக்கு வீடு சுயதேவைப் பூர்த்தி செய்தல் என்ற வகையில் துணிப் பிரச்னையைத் தீர்ப்பதற்காக பருத்தி பயிர் செய்வது முதல் துணி நெய்வது வரையில் உள்ள எல்லா வேலைகளிலும் இப்பொழுது உபயோகமாகும் உபகரணங்களையெல்லாம் திருத்தி அமைப்பதற்கும் இடமிருக்கிறது. சங்கம் இத்தகைய சோதனை ஒவ்வொன்றுக்கும் தன் வேலைத் திட்டத்தில் முக்கியமான இடமுண்டென்று கருதுகிறது. தன் உபகரண உற்பத்திச்சாலைகளிலும், கதர் வித்தியாலயங்களிலும், உற்பத்தி ஸ்தலங்களிலும் இத்தகைய சோதனைகள் நடைபெறுவதற்குச் சங்கம் வசதி செய்து கொடுத்திருக்கிறது. சங்கத்திற்கு வெளியே எவரேனுமோ அல்லது ஏதேனுமொரு ஸ்தாபனமோ இத்தகைய சோதனைகள் நடத்துமானுல் அவைகளுடன் தொடர்பு வைத்துக் கொண்டு தன்னுலான உதவிகளையெல்லாம் அளிப்பதற்குச் சங்கம் முயன்று வருகிறது. சிறிய திருப்திகரமான சோதனைகளுக்கு

---

* ஏற்கெனவே இந்நூல் நம்மால் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. விலை ரூ. 1-0-0.

ஊக்கமளிக்கக் கருதி சங்கம் அவ்வப்பொழுது சில வெகுமதிகளும் வழங்கி வருகிறது. சோதனையாளரே ஒருங்கு சேர்ந்து அவர்கள் ஒவ்வொருவரும் நடத்திவரும் சோதனைகளின் விவரங்களை மற்றவர்கள் அறிந்துகொள்ளவும், புதிய சோதனைகள் நடத்து வதற்குத் தூண்டுதல் ஏற்படவும் அவர்கள் செய்யும் சோதனைகளில் நோக்கங்களும் வரம்புகளும் யாவைஎன்பது அவர்களுக்குத் தெரியவும் வேண்டுமென்று கருதி 2 வருஷங்களாக மகாநாடு நடத்தப்பட்டு வருவது ஏற்கனவே குறிப்பிடப்பட்டது. இந்த வருஷத்தில் இந்த வேலைக்காகச் சோதனையாளர்களின் கமிட்டி ஒன்றையும் அமைத்திருக்கிறது. இதன் மூலமாக கதர் சம்பந்தமான எல்லாச் சோதனைகளுக்கும் விசேஷமான முயற்சிகள் தொடங்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

13. கதர் வித்தியாலயம் :

கிராம சேவையும் கதர் வேலையும் தனித்தன்மை வாய்ந்த வேலைகளாகையால் இவற்றை நடத்தும் முறைகளும் இவற்றிற்கான சாஸ்திரங்களும் தனிச் சிறப்பு வாய்ந்தவையாயிருக்கின்றன. இவற்றைத் தெரிந்துகொள்வதற்கு ஒன்று, இவற்றில் தாமே பழகியாகவேண்டும், அல்லது பிரத்யேகமான வித்தியாலயமொன்றில் பயிற்சி பெற்றாகவேண்டும். சாதாரண ஊழியர்களுக்கு முதலில் செய்து பார்த்து அனுபவம் பெற்று பிறகு ஊழியம் செய்வதென்பது சிரம சாத்தியமாயிருப்பதாலும் இதிலேயே வாழ்க்கையின் அதிககாலம் செலவழிந்துவிடுமாகையாலும் வித்தியாலயங்கள் இருப்பது மிகுந்த உதவியுள்ளதாகக் கருதப்படுகிறது. இதனாலேயே கதர் வித்தியாலயங்கள் நடத்தப்படுகின்றன. சேவாகிராமத்தில் நடக்கும் தலைமை வித்தியாலயத்தைத் தவிர பல மாகாணங்களிலும் வித்தியாலயங்கள் நடந்துவருகின்றன. ஒவ்வொரு மாகாணத்திலும் வித்தியாலயம் நடக்கவேண்டுமென்பது நமது திட்டமாகும். ஆனால் தகுந்த ஆசிரியர்கள் இல்லாமையால் அவ்வாறு செய்ய இயலவில்லை.

இந்தக் கதர் வித்தியாலயங்களின் பாடதிட்டங்களை வகுப்பதற்கென சங்கம் ஒரு சிக்ஷா சமிதியை நியமித்திருக்கிறது. இந்த சமிதி குறுகிய காலத்திற்கும், நீண்டகாலத்திற்குமென பலவகைப் பாடதிட்டங்களை வகுத்திருக்கிறது. அவற்றுள் 'காதிபிரவேச்,' 'கதாயி காரியகர்த்தா' (நூற்பு ஊழியர்) 'புனயி காரியகர்த்தா' (நெசவு ஊழியர்), 'ஸரஞ்சாம் காரியகர்த்தா' (உபகரண ஊழியர்) என்ற பரிக்ஷைகள் முக்கியமானவை.

வித்தியாலயத்தில் சேரும் மாணவர் ஆரோக்கியமுள்ளவராயும், துர்ப்பழக்கம் இல்லாதவராயும், உழைப்பாளியாயும் இருப்பதோடு

உணவிலும் மற்ற நடவடிக்கைகளிலும் ஜாதிமத வேற்றுமைகளை ஒப்பாதவராயும் கதர் உடுத்துவோராயும் 18 க்கு அதிக வயதானவராயும் இருக்கவேண்டும். வித்தியாலயத்தில் எல்லோருடனும் ஒன்றாக வாழ்வதோடு கக்கூஸ் சுத்தி, மாவு அரைப்பு, சமையல் முதலிய வேலைகளையும் செய்யவேண்டும். அவர் குறைந்தது மெட்ரிகுலேஷன் வரையில் படித்தவராயும் இருக்கவேண்டும்.

மாணவர்களுக்கு அகவிலை ஏறியுள்ள இக்காலத்தில் மாதத்திற்கு சுமார் ரூ. 25 செலவுக்கு வேண்டுமென்று கருதப்படுவதோடு வருங்காலத்தில் நிர்மாண வேலை செய்வோரின் சொந்தச் செலவும் இவ்வளவே இருக்கவேண்டுமென்று எண்ணப்படுகிறது. கல்வியின் போதனைக்கு சேவா கிராமத்தில் ஹிந்துஸ்தானியும் மாகாணங்களில் அந்தந்த மாகாண பாஷையும் உபயோகிக்கப்படுகின்றன. ஆனால் சாதாரணப் பழக்கத்தின் மூலமாக ஹிந்துஸ்தானியில் அவர்கள் போதிய பயிற்சி பெற முயற்சி செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கிறோம்.

மாணவர்களின் முதல் 2 மாத அனுபவத்தின் மீது தேவையாயிருந்து சங்கத்தின் வரவு செலவு திட்டத்திலும் இடமிருக்குமானால் வெவ்வேறு பயிற்சிகளின் தரத்தையும் திட்டத்தையுமொட்டி மாதத்திற்கு ரூ. 15 வரையில் உபகாரச் சம்பளமும் சங்கத்தின் சார்பில் அளிக்கப்பட்டு வந்தது. கிளைகளின் வித்தியாலயங்களிலோ அந்தந்த ஸ்தலத்தின் தேவையை அனுசரித்து இதற்குச் சிறிது அதிகமாகவும் இந்த உதவி அளிக்கப்பட்டுவருகிறது. பயிற்சிக்கட்டணம் மாதத்திற்கு ரூ. 10 என்று வைக்கப்பட்டிருந்த போதிலும் உபகாரச் சம்பளம் பெறும் மாணவர்கள், சங்கத்தின் ஊழியர்கள், நிர்மாண வேலை செய்யும் ஸ்தாபனங்களின் சார்பில் அனுப்பப்பட்டுள்ள மாணவர்கள் ஆகியோரிடமிருந்து சாதாரணமாக இது வசூலிக்கப்படுவதில்லை. மாணவர்களின் மூலமாக உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் கிரயம் வித்தியாலயக் கணக்கிலேயே சேர்த்துக்கொள்ளப்படுகிறது. கதர் வித்தியாலயங்களில் கதர்க் கலையைத் தவிர சுய தேவைப் பூர்த்தி நோக்கத்துடன் சில பழக்கங்களை உண்டாக்கவும் முயற்சி நடைபெறுகிறது. பிரார்த்தனை, சமையல், சாதாரணத் துப்புரவு வேலை, கக்கூஸ் கூட்டல் ஆகிய வேலைகளைத் தாமே செய்தல் இவ்வகையில் உதவியாயிருக்குமென்று கருதப்படுகிறது. வித்தியாலயத்தில் இதைத் தவிர மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்கென கதர் தத்துவம், பொருளாதார சாஸ்திரம், கணிதம், யந்திர சாஸ்திரம் முதலிய விஷயங்களுக்கும் வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

14. முகாம் :

நாட்டிற்கு அரசியல் புரட்சியின் பயனாக சுதந்திரம் பெற்ற பிறகு மக்களுக்குப் பொருளாதார சமூக சுதந்திரங்களும் கிடைத்தல் அவசியமாகும். இன்று நாம் நம் முழு கவனத்தையும் இதிலேயே செலுத்தவேண்டும். இதில் வெற்றி பெற வேண்டுமானால் சர்க்கா சங்கத்தின் ஊழியர்கள் நம் புதிய நோக்கத்தையும், புதிய வேலைத் திட்டத்தையும் புரிந்துகொள்ள வேண்டும். இத்துடன் இந்த இயக்கத்தை நடத்துவதற்கு அநுகூலமான முறையில் அவர்களின் மனமும் அமைந்திருக்க வேண்டும். இதைத் தவிர இந்த வேலைத் திட்டத்தை எங்கும் பரப்ப வேண்டுமானால் நாட்டின் வாலிபர் அனைவருக்கும் இந்தப் புதிய புரட்சி யாது, இதன் தன்மை என்ன, இதை எவ்வாறு நடத்தவேண்டும் என்ற விஷயங்களெல்லாம் சரியாகத் தெரிந்திருக்க வேண்டியதோடு இவற்றில் அவர்களுக்குப் பழக்கமும் ஏற்பட்டிருக்கவேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் நம் விஷயங்களை யெல்லாம் நன்கு புரிந்துகொண்டு நம்முடன் ஒத்துழைக்க முன் வருவது சாத்தியமாகும்.

சுயதேவைப் பூர்த்தி முறையில் செய்யப்படும் கிராம சேவையும் ஒரு கலையே. இதற்குப் பிரத்யேகமான மனப் பண்பும் வாழ்க்கைப் பயிற்சியும் தேவையாகும். ஆகையால் சங்கத்தின் புதிய முயற்சிகளையும் நாட்டில் எழுந்துள்ள பல்வேறு பிரச்னைகளைத் தீர்ப்பதற்குள்ள உபாயங்களையும் தெரிவிப்பதற்காக நாட்டின் பல பாகங்களிலும் அவ்வப்பொழுது முகாம்கள் நடத்துவதென சங்கம் முடிவு செய்திருக்கிறது. இத்தகைய முகாம்களில் ஒரு மாதம் அல்லது 15 நாள் தங்கி சுயதேவைப் பூர்த்திமுறையிலும், கூட்டுறவு முறையிலும் வாழ்க்கையை நடத்துவது எப்படி யென்பதையும், அவ்வாழ்க்கையின் நோக்கங்கள் யாவை யென்பதையும் தெரியவும், பழகிக் கொள்ளவும் செய்யலாம்.

முகாம்களில் சங்கத்தின் ஊழியர்கள் கலந்து கொள்ளவே செய்வார்கள். அவர்களோடு காந்திஜி வகுத்துள்ள நிர்மாண வேலைத் திட்டங்களில் நம்பிக்கை கொண்டு அவற்றில் கலந்து கொள்வதற்கு ஆசைகொண்டுள்ள வாலிபர்களும் சேர்ந்து கொள்ளலாம். மாகாணங்களில் முகாம்கள் நடைபெறும் இடம், தேதி ஆகிய விவரங்கள் 'காதிஜகத்'தி (கதர் மலரி) லும் மாகாணப் பத்திரிகைகளிலும் முன்னரே வெளியிடப்படும்.

முகாம்களில் கலந்து கொள்வோர் தம் சாப்பாட்டுச் செலவு, பிரயாணச் செலவு ஆகியவற்றைத் தாமே ஏற்றுக்கொள்ளவேண்டும். சாதாரணமாக தினமும் 4 மணி நேரம் கைத்தொழில் வேலையிலும் அதில் பாதி நேரம் பேச்சுக்கள் சர்ச்சைகள் ஆகியவைகளிலும் செலவாகும். பாக்கியுள்ள நேரம் சுயதேவைப் பூர்த்தியும்

கூட்டுறவு வாழ்க்கையும் நடத்துவதெப்படியென்பதை விளக்கும் வேலைகளுக்கென ஒதுக்கப்படும். சமையல், கக்கூஸ் சுத்தம், கிராமச் சுத்தம், கூட்டுத்தோட்டவேலை, கதர் உற்பத்தியிலுள்ள பல வேலைகள் ஆகியவைகளை முகாம்களுக்கு வருவோர் பயிற்சி நோக்குடன் தாமே செய்தல் நலமென்று கருதி அதற்குகந்த முறையிலேயே திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு குறைந்த காலத்தில் இயற்கையானதும், பொருத்தமுள்ளதுமான பயிற்சியின் மூலமாக அமைக்கப்பட்டுள்ள ஒரு வாழ்க்கை முறையை முகாமில் நாம் காணலாகும்.

முகாமில் 30 முதல் 60 வரையில் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப் படுவார்களானல் ஒவ்வொருவருடனும் நெருங்கிப் பழகவும், எல்லோருக்கும் தகுந்த முறையில் வழி காட்டவும் வசதியாயிருக்கும். முகாமிலுள்ளவர்களின் தொகை குறைவாயிருக்குமானல் நாம் எந்த இடத்திலும் முகாமை நடத்துவதும், தேவையான இடம் சுலபமாகக் கிடைப்பதும் சாத்தியமாகும். முகாம்களுக்கென கொட்டகை பந்தல் ஆகியவை நிர்மாணிக்கவும், அவற்றிற்காகச் செலவு செய்யவும் தேவை ஏற்படாதபடி பார்த்துக் கொள்ளவேண்டும்.

15. பிரசுரம் :

1941 ஜுலை முதல் சங்கத்தின் சார்பில் 'காதி ஜகத்' என்ற மாதாந்திரப் பத்திரிகை தொடங்கப்பட்டது. இது 1942-ம் வருஷத்தின் இயக்கம் காரணமாக சுமார் 3 வருஷம் நிறுத்தப்பட்டு 1945 செப்டம்பரிலிருந்து மீண்டும் பிரசுரமாகி வருகிறது. இதே காலத்தில் எவ்வளவோ செலவு செய்தும் உழைத்தும் சங்கத்தின் செய்திகளை பொதுஜன பத்திரிகைகளிலும் சுற்றுக் கடிதங்கள் மூலமாகவும் வெளியிட்டு பொது மக்களுக்கு அறிவிக்க முயற்சி செய்யப்படுகிறது.

'காதி ஜகத்' தின் மூலமாக சிறந்த கதர் இலக்கியம் தயாரிக்கப்பட்டு வருகிறது. கதர் வேலை, கதர்க் கலை ஆகியவற்றின் விளக்கங்கள் முக்கியமாக அதில் வெளிவருகின்றன. இப்பொழுது ஹிந்துஸ்தானி தாலிமீ சங்கம், அகில பாரத கோ ஸேவா சங்கம் ஆகியவற்றின் பத்திரிகையாகவும் அது ஆகியிருக்கிறது. வாசகர்களுக்கு இதன் மூலமாக கதர் சாஸ்திரத்தின் பல அம்சங்களையும் விளக்கும் ஆராய்ச்சிக் கட்டுரைகளும் ஆதாரக் கல்வியின் முன்னேற்றம், கோ ஸேவை, கிராம ஸேவை ஆகியவற்றிலுள்ள தனிப்பட்ட நோக்கு, நிர்மாண வேலை செய்துவரும் பிற ஸ்தாபனங்களின் விவரங்கள் ஆகியவையும் படிப்பதற்குக் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. 'காதி ஜகத்'துக்கு வருஷ சந்தா ரூ. 6. அங்கத்தினரிட

மிருந்து ரூ. $5\frac{1}{4}$ம், சங்கத்தின் கௌரவ ஊழியர்களிடமிருந்து ரூ. 3-ம் வாங்கப்படுகின்றன. சங்கத்தின் கிராம ஊழியர்களுக்கு இது இலவசமாகவே அனுப்பப்படுகிறது. பெரும்பாலும் வி. பி. அனுப்பும் வழக்கமில்லை.

கதர் சாஸ்திர சம்பந்தமான சுமார் 22 புஸ்தகங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

16. கண்காட்சி :

பிரசாரத்திற்கு முக்கியமான சாதனமாயிருப்பதனால் பலவிடங்களிலும் கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. இதுவரையில் காங்கிரஸ் மகாநாடு நடந்த விடங்களிலெல்லாம் காங்கிரசோடு அழைக்கப்பட்டதன் பேரில் சங்கம், கதர்—கிராமக் கைத்தொழில் கண்காட்சிகளுக்கு ஏற்பாடு செய்து வந்திருக்கிறது. சொந்தத்திலேயே கண்காட்சி நடத்தும் ஏற்பாடு இதுவரையில் செய்யப்படவில்லை. 'ஏனெனில் காங்கிரஸ் மகாநாடு கூடும் சமயத்தில் அங்கே வரும் ஏராளமான ஜனக்கூட்டத்தில் பெரும்பாலோருக்கு கண்காட்சியைப் போன்ற ஏற்பாடே காங்கிரசாகு'மென்பது காந்திஜியின் அபிப்பிராயமாகும். காங்கிரசுக்கு வரும் ஜனங்களில் வருஷத்திற்கு வருஷம் கிராமவாசிகளின் தொகையே அதிகமாகிக் கொண்டு வருகிறது. ஆகையால் சங்கத்தின் கருத்தில், எப்பொழுதுமே கண்காட்சி கிராம நோக்குடன் கவனிக்கையில் உண்மையானதாக இருக்கவேண்டுமென்றே இருந்து வந்திருக்கிறது. இந்தியாவில் கிராம நோக்கமே உண்மையான நோக்கமாகக் கூடும். நம் கிராமங்கள் உயிர் வாழ்ந்திருந்தால் மட்டும் போதாது, பலமும், செல்வமும் பெற்று ஓங்கவேண்டும். ஆகையால் சங்கத்தின் கண்காட்சிகளில் நகரத்தின் பொருள்களுக்கும் ஆடம்பரத்திற்குதவும் வஸ்துக்களுக்கும் இடமளிக்கப்படுவதில்லை. கண்காட்சி படிப்பினை அளிப்பதாக இருக்குமாகையால் அதைப் பார்க்கும் கிராமவாசிகள் ஏதேனும் ஒரு கைத்தொழிலைக் கற்க வேண்டியதன் அவசியத்தை உணர்வார்கள். நமது இப்பொழுதைய குறைகள் எவ்வாறு அகலும், கிராம முன்னேற்ற இயக்கம் ஆரம்பம் முதல் இதுவரையில் என்னென்ன வகையிலெல்லாம் வேலை செய்து வந்திருக்கிறது, வெவ்வேறு நிர்மாண வேலைத்திட்டங்களிலும் கிராமத்தின் நலம் எவ்வாறு அடங்கியிருக்கிறது என்ற விஷயங்களையெல்லாம் இந்தக் கண்காட்சிகள் நிதர்சனமாகக் காட்டி வந்திருக்கின்றன. கிராம வாழ்க்கையில் சுகமும் செல்வமும் கலையும் எவ்வாறு செழித்துக் கொழிக்கமுடியும் என்பதும் கண்காட்சியில் காட்டப்படவேண்டும்.

காங்கிரஸ் தனது ஒரு தீர்மானத்தின் மூலமாக தன் வருஷாந்திர மகாநாட்டுடன் கண்காட்சியை நடத்தும் வேலையை சர்க்கா சங்கத்தினிடமும், கிராமக் கைத்தொழில் சங்கத்தினிடமும் ஒப்பு

விக்கவே இச்சங்கங்கள் இதுவரையில் இதைச் செய்துவந்திருக்கின்றன. கண்காட்சிக்காகும் செலவுப் பொறுப்பை வரவேற்புக் கமிட்டிகளே ஏற்று வந்திருக்கின்றன. இந்தக் கண்காட்சிகளுக்கு ஏற்பட்ட வெற்றியைக் கண்டு பலவிடங்களிலும் கதர் கிராமக் கைத்தொழில்கள் என்ற பெயரில் ஸ்தல மக்களின் உற்சாகத்தைக் கொண்டே கண்காட்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வந்திருக்கின்றன. இவற்றில் கலந்துகொள்ள வேண்டுமென்று சங்கத்திற்கும் அழைப்புகள் அடிக்கடி வந்துகொண்டிருக்கின்றன. இக்கண்காட்சிகள் மேலே கண்ட நோக்கங்களின்படி எங்கெல்லாம் நடந்தனவோ அங்கெல்லாம் கதர் கிராமக் கைத்தொழில் வேலைகளை நிதர்சனமாகச் செய்துகாட்டும் கோஷ்டிகளை அனுப்பி வைத்ததோடு விற்பனைக் கடைகள் வைத்தும் ஆனவரையில் ஒத்துழைக்க சங்கம் முயன்று வந்திருக்கிறது. இதற்காகும் செலவுகளையெல்லாம் கண்காட்சி நிர்வாகிகளே ஏற்றுவந்திருக்கிறார்கள். கண்காட்சி ஏற்பாடுகளைத் தொடர்ந்து செய்துகொண்டே இருக்க வேண்டியிருந்ததால் சங்கம் கண்காட்சி இலாக்கா ஒன்றையும் ஆரம்பித்திருக்கிறது. ஆனால் கிராம நோக்கம் முக்கியமாயுள்ள கண்காட்சிகளில் மட்டுந்தான் சங்கம் கலந்துகொண்டு வந்திருக்கிறது. எந்தக் கண்காட்சிகளில் ஆலைத்தொழில்கள் அனுமதிக்கப்பட்டனவோ அவற்றில் சங்கம் கலந்துகொண்டதில்லை; தன் ஒரு தீர்மானத்தின் மூலமாகச் சங்கம் கண்காட்சிகளைப் பற்றிய தன் கொள்கையை மீண்டும் தெளிவுபடுத்தியிருக்கிறது:—

"சர்க்கா சங்கம் கண்காட்சிகளில் கலந்துகொள்வது பற்றி நிச்சயமான ஒரு கொள்கையைப் பின்பற்றி வந்திருக்கிறது. அக்கொள்கையை காங்கிரஸ் காரியக் கமிட்டி ஒப்புக்கொண்டு மிருக்கிறது. ஆனால் இன்றைய நிலைமையில் அக்கொள்கையை மீண்டும் விவரமாகவும் தெளிவாகவும் எடுத்து விளக்குதல் அவசியமென்பதைச் சங்கம் உணருகிறது. ஆலைகள் அதிகமாவதும், பரவுவதும் ராட்டையின் கொள்கையுடனும் செயல் முறையுடனும் நிச்சயமாக முரண்படுபவையாகையால் சர்க்கா சங்கம் எந்தக் கண்காட்சிகளில் ஆலை நூலும், ஆலைத்துணிகளும் கிராமக் கைத்தொழில்களை பாதிக்கும் பிற பொருள்களும் இடம் பெறுகின்றனவோ அவற்றில் கலந்துகொள்வதில்லை என முடிவு செய்திருக்கிறது. வருங்காலத்தில் இதே கொள்கையைப் பின்பற்றுதல் மிகவும் அவசியமென்று சங்கம் கருதுகிறது. இன்றுவரையில் கதர் அடைந்துவந்த முன்னேற்றத்தில் கதரை விலைக்கு வாங்கவேண்டிய ஒரு வஸ்துவென்றே மக்கள் கருதி வந்திருக்கிறார்கள். சர்க்கா சங்கத்தின் புதிய நோக்கப்படி சங்கம் இப்பொழுது ராட்டையின் உண்மையான குறிக்கோளை நோக்கி அடியெடுத்து வைத்திருக்கிறது. அதாவது, மக்கள் தம் ஜீவாதாரத் தேவைகளுக்கு மத்தியஸ்தாபனமொன்றின்

தயவை எதிர்பாராமல் சுதந்திரமான, அஹிம்சையை ஆதாரமாகக் கொண்ட சமுதாயத்தை அல்லது உண்மையான ஜனநாயகத்தை அமைப்பதற்கு உதவக்கூடிய போதனையை மக்களுக்கு அளிப்பதையே சங்கம் தனது முக்கிய நோக்கமாகக் கொண்டிருக்கிறது. இந்த லட்சியம் கைகூட வேண்டுமானால் கதர் வேலை இனி உற்பத்தி விற்பனையென்ற அம்சங்களைக் கொண்ட நவீனப் பொருளாதார சாஸ்திரத்திலிருந்து தன்னை அகற்றிக் கொண்டாக வேண்டும். அதாவது கதர் உற்பத்தியின் மூலமாக மக்களின் துணித்தேவையைப் பெருத்த அளவில் பூர்த்தி செய்வதை விட்டு உடை சுயதேவைப் பூர்த்திக்காக வீட்டிக்கு வீடு நூற்பும், கிராமம் கிராமமாக நெசவும் நடைபெறுவதற்கு வேண்டியவைகளையெல்லாம் செய்ய முயலவேண்டும். ஆகையால் கண்காட்சிகளில் இனிக் கதர் விற்பனையென்பதே நடைபெறாமல் உறுதியான அழகிய கதரின் மாதிரிகள் மட்டும் பார்ப்பதற்காக வைத்திருந்தால் போதுமானது. இத்துடன் வீடுகளிலேயே சுலபமாகக் கையாளக்கூடிய முறைகளைக் கொண்டு சிறந்த கதரை எவ்வாறு உண்டாக்கலாமென்பதையும் அது சம்பந்தமான பல வேலைகளையும் போதனை நோக்குடன் செய்து காட்டவேண்டும். மேலே கூறிய விஷயங்களைக் கருத்தில் கொண்டு கண்காட்சிகளில் கலந்துகொள்ளும் விஷயத்தில் சங்கம் கீழ்க்கண்ட கொள்கைகளைப் பின்பற்றுவதென முடிவு செய்திருக்கிறது :—

"சங்கம் எந்தக் கண்காட்சிகளில்,

(க) அதன் அமைப்பாளரின் நோக்கம் போதனையளிப்பதாயில்லாமல் பணம் சம்பாதிப்பதாய் இருக்கிறதோ,

(ங) கண்காட்சியின் அமைப்பிலும, ஜோடிப்பிலும், பிரசாரத்திலும் ஆலை நூலும், ஆலைத் துணிகளும் உபயோகிக்கப்படுகின்றனவோ,

(ச) கிராமக் கைத்தொழில்களுக்கு பாதகமான பொருள்களின் பிரசாரமோ, விற்பனையோ, கண்காட்சியோ நடக்கிறதோ,

(ஞ) ஆதாரக் கல்விக் கொள்கைகளுக்கு மாறான கல்விமுறை சம்பந்தமான பிரசாரமோ காட்சியோ நடைபெறுகிறதோ,

(ட) துணியைப்பற்றிய வரையில், கதர் வாங்கி விற்கப்படுகிறதோ,

(ண) விளையாட்டு, நாடகம், பிரசாரம், துண்டுப்பிரசுரங்கள் ஆகியவற்றின் மூலமாக ஹிம்சைமயமான சூழ்நிலை பரப்பப்படுகிறதோ, அவைகளில் சங்கம் கலந்துகொள்ளக் கூடாது."

இன்று கிராமக் கைத்தொழில்களைக் கொண்டு கிராமங்களை சுயதேவைப் பூர்த்தி செய்பவையாக்குவதைத் தடுக்கக்கூடிய

பொருள்களை யந்திரங்களைக்கொண்டு ஏராளமாக உற்பத்தி செய்வதற்குப் போட்டாபோட்டி தோன்றியிருக்கிறது. ஆகையால் சர்க்கா சங்கமோ அத்துடன் ஒத்துழைக்கும் பிற சங்கங்களோ மேலே கூறிய கொள்கைகளை முழுமையும் அனுசரித்து நடக்க வேண்டியது அவசியமாகிறது. அப்பொழுதுதான் கண்காட்சிகள் சங்கத்தின் நோக்கத்திற்குத் தீங்கு விளைவியாமல் மக்களின் பொருளாதார சமுதாய நீதிசம்பந்தமான வளர்ச்சிக்கு உதவவும், போதனைக்குரிய கருவியாகவும் முடியும்.

17. நூல் சந்தா :

இந்தியாவிலுள்ள விசேஷமென்ன வென்றால், இங்கே ஜனத் தொகை ஏராளமாயிருந்த போதிலும் இவ்விடத்திய வறுமைக்கும் ஒரு அளவில்லை. இந்த வறுமைக்கு உள்ள ஒரே காரணம் இந்திய மக்களுக்கு உழைப்பில் பற்றில்லாமையே. இந்தக் குறையைப் போக்குவதற்காக மதப்பற்றுள்ள இந்நாட்டில் காந்திஜி நூல் வேள்வியை ஆரம்பித்துவைத்தார். இதனாலேயே அவர் நூல் சந்தாவையும் தொடங்கச் செய்தார். நாட்டின் முன்னேற்றத்திற்கான வேலைகளுக்குப் பணமும் தேவையாகவேதானிருக்கிறது. பணக்காரர்களிடமிருந்து பணம் வாங்கினால்தான் நம் வேலைகள் நடைபெறும் என்ற நிலைமை ஏற்படுமானால் அவர்களின் மதிப்பு உயரும் ; ஆனால் அவர்களும் ஒரு சிலரே இருக்கிறார்கள். ஆனால் நம் நாட்டின் ஜனப் பெருக்கமே நமக்குள்ள பெரும் பலமாகும். ஆகையால் பொதுமக்களைச் சிறிது சிறிதாக வேலை செய்விப்போமானால் அதைக் கொண்டே இந்த ஏழைநாட்டிலும் சேரக்கூடிய பணத்தைக்கொண்டு ஒரு கவலையுமில்லாமல் நம் நிர்மாண வேலைகள் அனைத்தையும் செய்து வர இயலும். நூலே நமது பொதுமக்களின் நாணயமாகும். மனமும் முயற்சியுமே தேவை. இவை இரண்டு மிருக்குமானால் இரு கைகளுள்ள எல்லா வயது ஆண் பெண்களும், கூன் குருடு முடங்களும்கூட நிர்மாண வேலைகளுக்காகத் தம் சந்தாவைச் செலுத்த முடியும். சந்தாவின் மூலமாகஉழைப்பில் பற்றுத் தோன்றிப் பெருகுமென்று சொல்லத் தேவை யில்லை.

18. கௌரவ ஊழியர் :

சர்க்காசங்கத்தின் சொந்தமானதும் அத்தாட்சிபெற்றதுமான ஸ்தலங்களைத் தவிர நாடு முழுமையும் கதர்வேலையைச் செய்து வந்திருப்பவர்களும், இன்று சர்க்கா சங்கம் வற்புறுத்திவரும் வேலைகளை வெகு காலத்திற்கு முன்னாலிருந்தே செய்துவருகிறவர்களுமான ஊழியர்கள் எத்தனையோ பேர் இருந்து வருகிறார்கள். சர்க்கா சங்கம் இன்று உடை சுயதேவைப் பூர்த்தி வேலையில் கவனத்தைச் செலுத்தியிருப்பதோடு இவ்வேலை பெரிதும் வளர்ந்து விருத்தியாக

101476 ... KE, MADRAS

வேண்டுமென்றும் விரும்புகிறது. ஆகையால் இத்தகைய ஊழியர்களுடன் சங்கத்திற்குத் தொடர்பு ஏற்படவேண்டுமென்று முயற்சி செய்யப்படுகிறது. அவர்களுக்கும் சங்கத்திற்கும் விசேஷமான தொடர்பு இருப்பதைக் காட்டுவதற்காக அவர்கள் சங்கத்தின் கௌரவ ஊழியர்களெனக் கருதப்படவேண்டுமென்று முடிவாகியிருக்கிறது.

இந்த கௌரவ ஊழியர்கள் சங்கத்தினிடமிருந்து சம்பளமோ, மதிப்போ எதிர்பார்க்க மாட்டார்கள். ஆனால் அவர்கள் தாமே நூற்றநூலாக மாதத்திற்கு ½ சிட்டம் அல்லது வருஷத்திற்கு 6 சிட்டம் சந்தா செலுத்தி சங்கத்தின் உதவி அங்கத்தினர் ஆவார்கள். இவர்கள் ஏற்கெனவே உடை சுயதேவைப் பூர்த்தி செய்து வருவோராகவே இருப்பார்கள்; அல்லது அதற்கான முயற்சிசெய்து வருவார்கள்.

இத்தகைய கௌரவ ஊழியர்களின் பெயர்கள் சங்கத்தின் சார்பில் தன் பத்திரிகையில் (காதிஜகத்தில்) பிரசுரிக்கப்படும். இத்துடன் சங்கத்தின் வேலைத் திட்டத்தில் அவ்வப்பொழுது செய்யப்படும் மாறுதல்களின் விவரங்களை இவர்களுக்கு அறிவிக்கச் சங்கம் முயற்சி செய்யும். சங்கத்தின் வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக நடத்தி வைப்பதில் இந்த கௌரவ ஊழியர்கள் பெரும் பங்கெடுத்துக் கொள்வார்களென்று எதிர் பார்க்கப்படுகிறது. ஏதேனும் ஒரு மாகாணத்தில் இத்தகைய மதிப்பிற்குரிய கௌரவ ஊழியர்களின் தொகை ஏராளமாகப் பெருகிவிடுமானால் அவர்களின் கூட்டமொன்றை வருஷாவருஷம் விசேஷ சந்தர்ப்பங்களில் கூட்ட முயலவேண்டுமென்ற எண்ணமும் சங்கம் கொண்டிருக்கிறது.

கௌரவ ஊழியருக்கு சங்கம் தன் மாதாந்திரப் பத்திரிகையான 'காதிஜகத்'தை அரைவிலைக்கு அனுப்பிவருவதோடு பெருத்த பிரசார வேலைக்காக அவர்கள் சுற்றுப்பிரயாணம் செய்ய நேருமானால் அப்பொழுது ஆகும் பிரயாணச் செலவை, அதாவது ரயில் அல்லது மோட்டாருக்கு ஆகும் செலவைமட்டும் சங்கம் ஏற்றுக்கொண்டு சேவைக்குத் தேவையான 'ஸ்டேஷனரி' சாமான்களின் செலவுகளையும் தபால் செலவுகளையும் ஒத்துக்கொள்ளும்.

கௌரவ ஊழியர் தம் அக்கம்பக்கத்தில் உடைசுய தேவைப் பூர்த்தியாளர் "உணர்ந்து அறிந்து" நூற்போரின் தொகையைப் பெருக்குவதற்கான முயற்சிகளைச் செய்துகொண்டிருப்பதோடு பலவிடங்களிலும் நூற்பு மண்டலங்களை ஸ்தாபிப்பதற்கும் உருவான முயற்சி செய்வதில் உத்சாகம் காட்டுவார்கள். கௌரவ ஊழியர்களையும் உடை சுயதேவைப் பூர்த்தி செய்வோரையும் கௌரவ அங்கத்தினர்களையும் சேர்ப்பதற்கு அவர்கள் முயலுவார்களென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. அவர்கள் குறைந்தது 3 மாதத்திற்கு

ஒருமுறை தாம் செய்துள்ள வேலைகளின் விவரத்தை சங்கத்திற்கு எழுதி அனுப்பி வருவார்கள். அவர்கள் கட்சிச் சண்டைகளிலோ, ஜாதிசமயச் சண்டைகளிலோ, ஒருபொழுதும் கலந்துகொள்ள மாட்டார்கள்.

மாகாணங்களில் நடைபெறும் முகாம்களில் கௌரவ ஊழியர்களும் கலந்துகொள்ளுதல் விரும்பத்தக்கதாகும். சங்கம் அவர்களை முகாம்களுக்கு வரச் செய்ய முயற்சி செய்வதோடு தேவையானல் முகாம்களில் அவர்களுக்காகும் செலவையும் ஏற்றுக்கொள்ளும்.

உதவி ஊழியர்கள் தம் அருகாமையில் உடை சுயதேவைப் பூர்த்தியைப் பெருக்குவதற்காக ஏதேனும் பொருட் செலவுள்ள பிரத்யேகமான திட்டங்கள் வகுக்க, சங்கத்திற்கு அவர்களுக்கு இவற்றிற்காகும் செலவைக் கொடுத்து உதவுவது அவசியமென்று தோன்றினல் இத்தகைய உதவியை அளிக்கும்.

19. உடை சுயதேவைப் பூர்த்தி அங்கத்தினர் :

உடை சுயதேவைப் பூர்த்தி செய்வோர் யாரென்றால், எவர் தாம் முழுவதும் கதரே உடுத்துகிறவராயிருப்பதோடு உடல் நலமின்மையோ, இதே போன்ற தனக்குக் கட்டுப்படாத காரணங்களோ தோன்றியுள்ள சமயங்களைத் தவிர மற்ற சமயங்களிலெல்லாம் தன் உபயோகத்திற்காகவோ தன் குடும்பத்தாரின் உபயோகத்திற் காகவோ, அல்லது நன்கொடைக்காகவோ நூற்புமட்டும் செய்து வந்தால் குறைந்தது $7\frac{1}{2}$ சிட்டமும், சம்பூர்ண நூற்பு அல்லது பருத்தி அரைப்பதிலிருந்து நூல் நூற்பு வரையில் எல்லா வேலைகளும் செய்பவராயிருந்தால் 5 சிட்டமும் நூற்கிறாரோ, அவரே.

சம்பூர்ண நூற்பில் அடங்கியுள்ள தத்துவம் எல்லா வகையிலும் நூற்பினலேற்படக்கூடிய லாபத்தைப் பெற வேண்டுமானுலும் கதரின் அஸ்திவாரத்தை உறுதிப்படுத்த வேண்டுமானுலும் நூற்பவரே தமக்குத் தேவையான பட்டைகளையும் தயாரித்துக் கொள்ளுதல் அவசியமானதும், இன்றியமையாததுமாகுமென்பதே. ஒவ்வொரு வீட்டிலும் உள்ள ஒவ்வொருவரும் நூற்கவேண்டுமானல் அந்தந்த வீட்டிலேயே பட்டையும் தயாரிக்கப்படவேண்டும். துனயி அல்லது சுளுவாகப் பட்டை போடும் முறையினல் இது கைகூடும்.

இப்பொழுது ஒவ்வொரு இந்தியனும் ஒரு வருஷத்திற்குச் சராசரி உபயோகிக்கும் துணி 15 ச.கெ. திற்கும் குறைவாகும். இந்தக் கணக்கின்படி மாதம் 5 சிட்டம் நூற்பவர்களும் 1 வருஷத்தில் 1 நபருக்குத் தேவையான துணிக்கு வேண்டிய நூல் முழுவதையும் நூற்றுவிடுவார். ஒரு மாதத்திற்கு 5 சிட்டம் வீதம்

சேரும் நூலைக்கொண்டு வருஷத்தில் 15 முதல் 17 ச.கெ. வரையில் உள்ள கதர் துணிக்கு வேண்டிய நூலை தயாரித்துவிடுவார். ஆகையால் இத்தகைய நூற்போரை உடை சுயதேவைப் பூர்த்தியாளரென்று அழைப்பதே சரியெனச் சங்கம் கருதுகிறது. உடை சுயதேவைப் பூர்த்தியாளரின் தொகையைக் கூடிய வரையில் பெருக்கும் நோக்கத்துடன் சங்கம் தன் கிளைகளுக்கு அதனதன் எல்லையில் நாளதுவரை உள்ள உடை சுயதேவைப் பூர்த்தியாளரின் பெயர்களைப் பதிவு செய்யவேண்டுமென்று கட்டளை இட்டிருக்கிறது. உடை சுயதேவைப் பூர்த்தியாளரும் தம் பெயரை இந்த ஜாப்தாவில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கோரப்படுகிறார்கள். இதற்கான விண்ணப்பப் பத்திரத்தை சங்கத்தின் தலைமைக் காரியாலயத்திலிருந்தும் கிளைக் காரியாலயங்களிலிருந்தும் தருவித்துக்கொள்ளலாம்.

20. நூற்பு மண்டலம்:

கதர் வேலைகள் இதுவரையில் வஸ்திராலயங்கள், ஏஜென்ஸிகள் காரியாலயங்கள் ஆகியவை மூலமாக நடந்து வந்திருக்கிறது. இதற்கு பதிலாக ஒவ்வொரு இடத்திலும் சிறிய சுயதேவைப் பூர்த்தி செய்யும் தொகுப்புகளைக் கொண்டு தானே தன் வேலைகளைப் பார்த்துக் கொள்ளக்கூடியதாக நூற்பு மண்டலங்கள் அமைப்பதென்று ஆலோசிக்கப்பட்டிருக்கிறது. சர்க்கா சங்கத்தின் சுயதேவைப் பூர்த்தி செய்யும் அங்கத்தினரும் உதவி அங்கத்தினருமே நூற்பு மண்டலத்தின் அங்கத்தினராக முடியும். குறைந்தது இத்தகைய 10 அங்கத்தினர்கள் சேர்ந்தார்களானால் ஒரு நூற்பு மண்டலத்தை அமைத்துக்கொள்ளலாம்.

நூற்பு மண்டலங்கள் அமைப்பதன் நோக்கம் பூர்ணமாகவோ, ஒரு பகுதியோ உடை சுயதேவைப் பூர்த்தி செய்யும் கருத்துடன் நூற்பவர்களுக்குக் கீழ்க்கண்ட வசதிகளைச் செய்து கொடுப்பதாகும்:—

க. பருத்தி, பஞ்சு சேமித்து வினியோகித்தல்.

ங. உபகரணங்கள் தருவித்துக் கொடுத்தலும் செப்பனிட்டுத் தருதலும்.

ச. பட்டை போடவும் நூற்கவும் போதித்தல்.

ஞ. துணியின் தரத்தையும் அளவையும் அனுசரித்து ஒவ்வொருவகைத் துணிக்கும் தேவையான நூல் எவ்வளவு என்பதைத் தெரிவித்தல்.

ட. நூற்ற நூலை நெய்வித்தல்.

ண. ஒரு பகுதி கதர் மட்டுமே தயாரித்து உடுத்துவோரை முழுதும் தயாரித்து உடுத்தச் செய்தல்.

இவ்வேலைக்கு அவசியமானல் நூற்பு மண்டலம் நன்கொடையாகவோ, சந்தாவாகவோ மூலதனம் சேர்த்துக் கொள்ளலாம். மண்டலத்தின் அங்கத்தினர்களில் எவரேனும் ஒருவரை நிர்வாகி அல்லது காரியதரிசியாக நியமித்துக்கொண்டு விருப்பமுண்டானல் சர்க்கா சங்கத்துடன் சம்பந்தம் வைத்துக் கொள்ளவும், சர்க்கா சங்கத்தின் நடைமுறைகளைப் பயன்படுத்திக் கொள்ளவும் செய்யலாம்.

சர்க்கா சங்கம் இவ்வாறு தன்னுடன் சம்பந்தம் வைத்துக் கொண்டுள்ள நூற்பு மண்டலங்களிலிருந்து கோரிக்கை வருமானல் அவற்றிற்குக் கீழ்க்கண்ட வகையில் உதவியளிக்க முயலும்:

க. கிரயம் வாங்கிக்கொண்டு நல்ல பருத்தியும் பஞ்சும் கொடுத்துதவுதல்.

ந. கிரயத்திற்கு எல்லாவகைக் கதர் உபகரணங்களும் கொடுத்துதவுதல். ஸ்தலத்திலேயே எங்கெந்த வகை உபகரணங்களை எந்த அளவுக்கு உற்பத்தி செய்ய குறிப்பிட்ட ஒருமண்டலத்தினல் முடியுமோ, அதை அங்கே தொடங்கிச் செய்வதற்குத் தேவையான ஆலோசனை யளித்தலும், மண்டலம் உபகரண உற்பத்தியில் பயிற்சி பெறுவதற்கு எவரையேனும் தன் செலவில் அனுப்பி வைத்தால் அவருக்குப் பயிற்சியளிப்பதற்கு ஏற்பாடு செய்தலும்; இவ்வாறு பயிற்சிபெற வருகிறவர்களுக்கு உபகாரச் சம்பளத்தில் ஓர் பகுதி கொடுத்துதவுதல்.

ச. விசேஷ சந்தர்ப்பங்களில் பிரசாரகர்களை அனுப்பிவைத்து ராட்டைகளை செப்பனிடச் செய்தலும் பிற குறைகளைப் போக்குதலும், வடம் (பெரியமால்) மாலைக்கயிறு ஆகியவை தயாரித்துக் கொடுத்தலும் நூற்பு சம்பந்தமான நுணுக்கங்களைப் போதித்தலும். இந்தப் பிரசாரகர்களின் யாத்திரைச் செலவையும் சம்பளத்தையும் சர்க்கா சங்கமே ஏற்றுக் கொள்ளும். பிரசாரகர் எவ்வளவு நாட்கள் மண்டலத்தின் வேலைகளைச் செய்து வருகிறரோ அந்த நாட்களில் அவருக்காகும் சாப்பாட்டுச் செலவையும் பிற சில்லறைச் செலவுகளையும் மண்டலங்களே செய்ய வேண்டும்.

ஞ. துனயி, பஞ்சு கொட்டுதல் நூற்பு ஆகியவற்றைப் போதிப்பதற்காக மண்டலத்தின் ஸ்தலத்திலேயே முகாம் நடத்துதல், இதை நடத்தும் பிரசாரகர்களுக்காகும் செலவுகள் மேலே (ச) வில் கூறியுள்ள வகையில் ஏற்றுக் கொள்ளப்படும். உபகரணங்கள், பஞ்சு ஆகியவற்றிற்காகும் செலவுகளை பயிற்சி பெறுவோரோ மண்டலங்களோ ஏற்க வெண்டியிருக்கும்.

ட. சிலசமயங்களில் கடிதத்தின் மூலமாகத் தம் நூலை நெய்வித்தல் போன்ற விஷயங்களில் சங்கம் தன்னாலான ஆலோசனையும் உதவியும் அளிக்கும்.

ண. எங்கே நூல் நூற்கப்படுகிறதோ அந்த ஸ்தலத்திலோ அதன் அருகாமையிலோ நூற்ற நூலை நெய்வித்தல் விரும்பத்தக்கதாகும். ஆனால் இது சாத்தியமில்லாத பொழுது மண்டலத்தின் காரியதரிசி அல்லது நிர்வாகி பக்கத்திலுள்ள உற்பத்திஸ்தலம் அல்லது வஸ்திராலயத்திற்கு அனுப்பி வைக்கலாம். அந்த நூலை உடை சுயதேவைப் பூர்த்தி நூலின் நெசவு சம்பந்தமாக அந்த சமயத்தில் அந்த இடத்தில் அமுலிலுள்ள விதிகள், கூலி விகிதங்கள் ஆகியவற்றின் படி சங்கத்தின்சார்பில் நெய்வித்துக் கொடுக்கப்படும்.

த. ஸ்தலத்திலேயே நெசவைத் தொடங்குவதற்கு உபகரணங்களைக் கொடுத்து உதவுவதைப் போலவே நெசவு சம்பந்தமான விஷயங்களைப் போதிக்கவும் மண்டலத்தின் சார்பில் அனுப்பப்படும் மாணவர்களுக்கு நெசவுக் கலையில் பயிற்சி யளிக்கவும் சங்கம் ஏற்பாடு செய்யும். இவ்வாறு வந்து பயிற்சி பெறுவோருடைய உதவிச் சம்பளத்தில் ஒரு பகுதியையும் சங்கம் கொடுத்து வரும்.

ந. மண்டலத்தின் அங்கத்தினர்களின் கதர் தேவையின் ஒரு பகுதியைப் பூர்த்தி செய்யவும் கதர் மண்டலத்தின் எல்லையிலுள்ள கதர் அன்பர்களுக்கு நூல் நிபந்தனை விதியின்படி கதர் விற்கவும், அந்தஸ்தலத்திற்கு உரிய கதர் விற்பனை ஏஜென்ஸி நூற்பு மண்டலத்திற்கே அளிக்கப்படும். ஏஜென்ஸிக்குரிய கமிஷன் வஸ்திராலயத்தினால் நூற்பு மண்டலம் எவ்வளவு தூரத்திலிருக்கிறதோ அதை யொட்டி அதிகமாகவோ, குறைவாகவோ நிர்ணயிக்கப்படும். மண்டலம் சர்க்கா சங்கத்தின் கதரையோ அல்லது அதனிடம் அத்தாட்சி பெற்ற ஸ்தாபனத்தின் கதரையோ வாங்கி விற்கலாம். கதர் விற்பனை யெல்லாம் நூல் நிபந்தனை விதியின் படியே செய்ய வேண்டும்.

ப. மண்டலத்தின் அங்கத்தினர்களுக்கு சர்க்கா சங்கத்தின் முகாமைப் போன்ற விசேஷக் காரியங்களில் கலந்து கொள்வதற்கு சில பிரத்யேகமான வசதிகள் செய்து தரப்படும். அவை அவ்வப்பொழுது நிர்ணயிக்கப்படும். எந்த நூற்பு மண்டலங்கள் மேலே கூறியுள்ள நோக்கங்களையும், விதிகளையும் அனுசரித்து வேலை செய்து சங்கத்துடன் தொடர்பு வைத்துக் கொள்கின்றனவோ அவைகளுக்கு சர்க்கா சங்கத்தின் சார்பில் அத்தாட்சிப் பத்திரம் அளிக்கப்படும். இவற்றின் விவரங்களை சர்க்கா சங்கம் அவ்வப்பொழுது பிரசுரித்து வரும்.

21. அங்கத்தினர் :

15 வயதுக்கு அதிகமான எவர் முழுதும் கதர் உடுத்துபவரா யிருந்து சர்க்கா சங்கத்திற்குத் தாமே நூற்ற நூலாக மாதம் 320 தார் அல்லது $\frac{1}{2}$ சிட்டம் வீதம் சந்தா செலுத்தி வருகிறாரோ அவரே அங்கத்தினர் ஆவார். (1 தார் = 4 அடி நீளம்)

அங்கத்தினராவதற்குத் தேவையான விண்ணப்பப் பத்திரத்தை சங்கத்தின் காரியாலயத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

ஒருவர் எந்த மாதத்திலிருந்தேனும் தொடங்கி எவ்வளவு காலத்திற்கு வேண்டுமானாலும் அங்கத்தினராகலாம். ஆனால் அங்கத்தினராவோர் முழு வருஷத்திற்கும் சங்கத்தின் வருஷம் தொடங்கும் மாதமாகிய ஜூலை முதலும் அங்கத்தினராதல் நலம்.

அங்கத்தினர் தாம் செலுத்தும் சந்தா நூலை கிரயத்திற் குத் திரும்ப வாங்கிக் கொள்ள முடியாது. ஆனால் சங்கத்தின் வஸ்தி ராலயங்களிலிருந்து அதற்குள்ள துணியை விலைக்கு வாங்கிக் கொள்ளலாம்.

தம்மால் முடிந்தவரையில் நூற்பையும் கதரையும் பரப்ப முயலுதல் அங்கத்தினரின் கடமையாகும்.

தாம் படிப்பதற்கு "காதி ஜகத்" தும் சங்கத்தின் மற்ற பிர சுரங்களும் $12\frac{1}{2}$ சதம் கமிஷன் குறைத்து உதவி அங்கத்தினருக்குக் கிடைக்கும்.

அங்கத்தினர் சேர்த்தலை சங்கத்தின் கொள்கைப்படி மிகவும் முக்கியமான வேலையென்று கருதவேண்டும். கூடியவரை யில் அதிகமாக அங்கத்தினர்களைச் சேர்ப்பதற்கு சங்கம் முயற்சி செய்யும்.

22. உற்பத்தியும், விற்பனையும் :

உடை சுயதேவைப் பூர்த்தி வேலையிலேயே தம் நேரம் முழுவ தையும் செலவிடுவதென சங்கம் முடிவு செய்திருக்கிறது. இதன் பொருள், இனி சங்கம் கதர் உற்பத்தியோ விற்பனையோ செய்வதை அறவே விட்டு விட்டது என்பதல்ல. கடந்த 25 வருஷங்களாக சங்கம் இவ்வேலையைத் தான் செய்து வந்திருக்கிறது. ஆகையால் அதை அப்படியே அந்தரத்தில் விட்டு விடுவது சாத்தியமானதல்ல. இவ்வளவு வருஷங்களுக்குப் பிறகு கதர் உற்பத்தியும் விற்பனையும், ஒரு முறையும் உருவும் பெற்று விட்டனவாகையால் ஒருவகையில் அவை இப்பொழுது சுலபமாகி விட்டன. அவற்றை சங்கத்தின் அனுபவத்தைக் கொண்டு பிறரும் செய்யலாம். ஆகையால் இனி உற்பத்தி விற்பனைகளை அத்தாட்சி பெற்ற ஸ்தாபனங்களிடம் ஒப்பு

வித்து அவற்றின் மூலமாகவே அவைகளை மேலும் விருத்தி செய்வ தென்று சங்கம் திட்டம் வகுத்திருக்கிறது. ஏனெனில், இந்த ஏற்பாட்டினால் அத்தாட்சி பெற்ற ஸ்தாபனங்களின் முதலும் ஊழியர்களும் சிரமமில்லாமல் கிடைப்பார்களாகையால் கதர் வேலை விருத்தியடைவதற்கு இடமுண்டாகும். ஸ்தாபனங்களுக்கு அத் தாட்சியளிப்பதற்குரிய விதிகளிலிருந்து ஆட்சேபிக்கக் கூடிய அம் சங்களெல்லாம் இதனாலேயே அகற்றப்பட்டு விட்டன. நூல் நிபந் தனையின் படி கதர் விற்றல் என்ற விதியை இஷ்டம் போல் அனு சரிப்பதற்கு அனுமதியளிக்கப் பட்டிருக்கிறது. பல விடங்களிலும் அத்தாட்சி பெற்ற ஸ்தாபனங்கள் தோன்றி இப்பொழுது நடை பெறும் உற்பத்தி விற்பனை வேலைகளை ஏற்று நடத்தத் தொடங்கி யிருக்கின்றன. புதிய இடங்களிலும் இதையே செய்வதற்கு முயற்சி நடந்து வருகிறது. இறுதியில் இந்த ஏற்பாட்டினால் கதரின் உற் பத்தியும் விற்பனையும் விருத்தியாகுமென்று சங்கம் நம்புகிறது.

23. அத்தாட்சிப் பத்திரம் :

“ அத்தாட்சி பெற்றதற்கும், பெறாததற்கும் வித்தியாசம் ” என்ற தலைப்பில் டில்லியிலிருந்து 5-1-48ல் பூஜ்ய காந்திஜி எழுதிய கட்டுரையில் “ அத்தாட்சி பெற்ற கதரே நம்பகமானதாக இருக்க முடியும். இங்கே அத்தாட்சி பெற்றது என்ற சொல்லுக்கு உள்ள முழுப் பொருளும் வெளிப்படவில்லை. எந்த நூலுக்கு அதற்குரிய முழுக்கிரயமும் கொடுத்து வாங்கப்பட்டிருக்கிறதோ, எந்தத் துணி முழுக்கூலி கொடுத்து நெய்யப்பட்டிருக்கிறதோ, எந்தக்கதர் லாபத் திற்காக வென்று இராமல் பொதுமக்களின் நன்மைக்கென்றே விற்கப்படுகிறதோ அதுவே அத்தாட்சி பெற்ற கதரெனப்படும். தன் தேவைக்காகத் தானே நூற்று நெய்து கொண்டது போக எஞ்சியதை கடையிலிருந்தே வாங்க வேண்டியிருப்பதால் அது நம் பகமானது என்பதைக் குறிக்க பொதுமக்களுக்கு அத்தாட்சி ஒன்று தேவையேயாகும். இத்தகைய அத்தாட்சியளிப்பதற்கு ஒரே ஒரு ஸ்தாபனந்தானிருக்க முடியும். அதுவே சர்க்கா சங்கம். ஆகையால் எதற்கு சர்க்கா சங்கம் அத்தாட்சியளிக்கிறதோ அதுவே நம் பகமான கதரென்று கருதப்படும். அதல்லாத கடைத்தெருவில் கதரென்று விற்கும் துணியெல்லாம் அத்தாட்சி பெறாதவையாகி விடுகின்றன.

“ அத்தாட்சி பெறவில்லை என்றால் அந்தத் துணியில் ஏதோ குறையிருக்கிறது என்பது தெளிவு. குற்றமுள்ள கதரை நாம் ஏன் வாங்கவேண்டும்? குற்றமுள்ள கதருக்கும், குற்றமில்லாத கதருக் கும் வித்தியாசமுண்டு என்ற விஷயத்தில் இருவகை அபிப்பிராயங் களுக்கே இடமில்லை.

"அத்தாட்சிப் பத்திரத்திற்குரிய நிபந்தனைகளிலேயே குற்றம் குறை இருக்கமுடியாதா என்று கேட்கலாம். ஏதேனும் குறை யிருக்குமானால் அதைச் சுட்டிக் காட்டுதல் பொது மக்களின் கடமையாகும். சோம்பேறிதனத்தினால் குறையை எடுத்துச் சொல் லாமல் இரண்டிற்கும் வித்தியாசமே இல்லை என்று கூற முயலுவது எந்த நிலைமையிலும் சரியாகாது."

சங்கத்தின் அத்தாட்சிப் பத்திரம் அளிப்பது சம்பந்தமான கொள்கையில் அவ்வப்பொழுது மாறுதல்கள் செய்யப்பட்டு வந்திருக்கின்றன. 1935-ல் வாழ்க்கைக் கூலித் தத்துவம் அமுலுக்கு வந்தபிறகு சொந்தப் பொறுப்பில் கதர் வேலை செய்வோர் இந்தக் கொள்கையை சரியாக அனுசரித்து நடப்பதில்லை என்ற விஷயமும் அனுபவத்திலிருந்து தெரியவந்தது. கதரின் தூய்மை, கொள்ளை லாபம் இல்லாமை ஆகியவற்றிலும் எவ்வளவு கவனம் செலுத்த வேண்டுமோ அவ்வளவு செலுத்தப்படவில்லை. ஆகையால் பெரும் பாலும் பொதுநலனுக்காக அமைந்துள்ள ஸ்தாபனங்களுக்கும் விசேஷமான சந்தர்ப்பங்களில் மட்டும் கூட்டுறவு ஸ்தாபனங்களுக் கும் மட்டுமே அத்தாட்சி அளிப்பதென சங்கம் முடிவு செய்திருக்கிறது.

அத்தாட்சிப் பத்திரம் விற்பனைக்கும் உற்பத்திக்கும் தனித் தனியாகவும் அளிக்கப்படுகிறது. இதிலுள்ள முக்கியமான விஷயம், அளிக்கப்படும் அத்தாட்சிப் பத்திரம் அந்தந்த ஸ்தாபனங்களுக்கே தவிர அவைகளிடமுள்ள கதருக்கோ, கதரினால் செய்த பிற பொருள்களுக்கோவல்ல என்பதே.

அத்தாட்சிபத்திரம் அளிப்பது சம்பந்தமான நடவடிக் கைகள் சர்க்கா சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தின் நேர் பார் வையில் நடைபெறுகின்றன. சங்கத்தின் காரியதரிசியின் அங்கீ காரத்துடன் அத்தாட்சிபத்திரம் அளிப்பதற்குக் கிளைக்காரியதரி சிக்கு அதிகாரமிருக்கிறது. கிளையில்லாத இடங்களில் தலைமைக் காரியாலயத்திலிருந்தே அத்தாட்சிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

அத்தாட்சிப் பத்திரம் அளிப்பதற்குரிய விதிகளில் கீழ்க்கண்ட விஷயங்கள் வற்புறுத்தப்படுகின்றன :—

1. நிர்வாக சபையின் அங்கத்தினர்கள் முழுதும் கதர் உடுத்துவோராகவும், அங்கத்தினர்களாகவும் இருப்பதோடு ஆலை நூலுடன் அவர்கள் எத்தகைய சம்பந்தமும் கொள்ளாமலும் இருக்கவேண்டும்.

2. தொழிலாளர்களுக்குச் சங்கம் நிர்ணயித்துள்ள விகிதத் திற்குக் குறைந்த கூலி கொடுக்கக்கூடாது. ஸ்தாபனத்தின் உற்

பத்தி விற்பனை விஷயங்களில் சங்கத்தின் விதிகளை அனுசரித்து நடப்பதோடு ரெஜிஸ்டர்களும் வைத்து வரவேண்டும். கதர் தூயதாயிருப்பதற்கும், கொள்ளை லாபத்திற்கு இடமில்லாதிருப்ப தற்கும் இவை அவசியமாகும்.

3. வருஷ முடிவில் ஏற்படும் லாபத்தை சங்கத்தினிடம் சேர்ப்பித்து சங்கம் தீர்மானிக்கும் வகையில் தொழிலாளரின் நன்மைக்கோ வாடிக்கைக்காரர்களின் நன்மைக்கோ அதைச் செலவு செய்யவேண்டும். மூலதனத்தைப் பெருக்குவதற்கு மிச்சத் தொகையை ஒருபொழுதும் உபயோகிக்கக் கூடாது.

அத்தாட்சிப் பத்திரம் சம்பந்தமான முழு விதிகளும் விண்ணப்பப் பத்திரங்களும் சங்கத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை சங்கத்தின் தலைமைக் காரியாலயத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

24. உடை சுயதேவைப்பூர்த்தி செய்வோரின் தொகையைப் பெருக்க உதவி:

சங்கத்தின் நோக்கம் நிறைவேற வேண்டுமானால் உடை சுய தேவைபூர்த்தி செய்வோரின் தொகையைக் கூடியவரையில் பெருக்க வேண்டும். ஆகையால் சங்கத்தின் கிளைகள் சுயதேவைபூர்த்தி ஊழியர்கள் ஆகியோரைத் தவிர வேறு இவ்வேலையைச் செய்ய விரும்பும் தனி நபர்களுக்கும் ஸ்தாபனங்களுக்கும் ஓரளவு உதவி யளிப்பதென சங்கம் தீர்மானித்திருக்கிறது. இவ்வுதவி கிராம ஊழியர்களுக்கும் கிடைக்கும்.

உடை சுயதேவை பூர்த்தி செய்வோரில் இரண்டு வகையினர் இருக்கக் கூடும். ஒன்று கூலிக்காக நூற்பவர்கள், மற்றொரு வகை யினர் கூலிக்காகச் சிறிதும் நூற்காதவர்கள். கூலிக்காக நூற்ப வர்கள் சாதாரணமாக மாதத்தில் குறைந்தது $7\frac{1}{2}$ சிட்டம் நூற்று விடு வர். அவர்களை வழக்கமாக முழுதும் கதரையே உடுத்தும்படி செய்வதற்கே முயற்சி செய்யவேண்டும். 2-வது வகையைச் சேர்ந்த கூலிக்கெனச் சிறிதும் நூற்காதவர்களோ பெரும்பாலும கதரே உடுத்தி வருவார்கள். அவர்களை தவறாமல் நூற்று வரும் படியாக மட்டும் செய்யவேண்டும். இவர்கள் கதரிடம் நம் பிக்கையுள்ளவர்களாகவும் நூலை 'அறிந்து உணர்ந்து' அல்லது ராட்டையை சத்தியம் அஹிம்சை ஆகியவற்றின் சின்னமாக மதித்து நூற்பவர்களாக இருப்பார்கள். இத்தகைய உடை சுயதேவைபூர்த்தி செய்வோரின் தொகை அதிகமாகவாக ராட்டை யின் தத்துவங்களும் அதிகமாகப் பரவும். ஆகையால் கூலிக் கெனச் சிறிதும் நூற்காத உடை சுயதேவைப்பூர்த்தியாளரின் தொகையைப் பெருக்குவதற்காக பொருளுதவியைச் சிறிது அதிக

மாகவும், கூலிக்கென நூற்பவர்களின் தொகையைப் பெருக்கு வதற்குச் சிறிது குறைவாகவும் அளிப்பது சங்கத்தின் கொள்கை யாக இருக்கும். உடை சுயதேவைப் பூர்த்திக்காக உதவியைக் கோருவோர் தம் கடிதத்தில் தாம் எவ்வகை உடை சுயதேவைப் பூர்த்தியாளரில் எவ்வளவு பேரைச் சேர்க்கலாமென்று எதிர்பார்க் கிறரென்பதைக் குறிப்பிடவேண்டும். ஏனெனில் அளிக்கப்பட விருக்கும் உதவியை யெல்லாம் புதிதாகச் சேர்க்கப்படும் உடை சுயதேவைப் பூர்த்தியாளரின் தொகையிலிருந்தே கணக்கிடப்படும். உடை சுயதேவைப் பூர்த்தியாளர் நூற்ற நூலை அந்தந்த ஸ்தலத்தி லேயே நெய்விப்பதற்கு முயற்சி செய்யப்படும்.

வரவுசெலவு கமிட்டியின் மூலமாக ஏதேனும் ஒரு ஸ்தாபனத் திற்கோ தனி நபருக்கோ உடை சுயதேவைப்பூர்த்தியாளரின் தொகையைப் பெருக்குவதற்கென உதவியளிக்க முடிவான பிறகு அவர்கள் ஒவ்வொரு மாதமும் வேலையின் முழு விவரங்களையும் சங்கத்தின் காரியாலயத்திற்கு அனுப்பி வரவேண்டும். இந்த விவரம் வந்து சேராத வரையில் உதவித்தொகை அனுப்பப்பட மாட்டாது.

25. உதவிபெறும் கதர்வித்தியாலயங்கள்:

சங்கத்தின் சிக்ஷாசமிதியின் பயிற்சி திட்டப்படி போதனை யளித்து வரும் சுதந்திர ஸ்தாபனங்களுக்கு கீழ்க்கண்ட வகையில் சங்கம் பொருளுதவியளிக்கும்:

மாத 'க்ராண்ட்' என்ற வகையில் இந்த உதவியை அளிப்பது சரியென்று சங்கத்திற்குத் தோன்றவில்லை. ஏனெனில் பரீக்ஷை நடந்து அவற்றில் தேறும் வரையில் ஸ்தாபனத்தின் மீதோ, மாணவர்களின் மீதோ பொறுப்பெதுவும் இல்லாதிருப்பதால் மனம் போனபடி போதனை நடக்க இடமுண்டாகிறது. ஆகையால் இவ்வுதவியை பரீக்ஷையில் தேறி வெளியேறும் மாணவர்களின் தொகையைக் கொண்டு நிர்ணயிப்பதே உசிதமென முடிவாகி யிருக்கிறது. வெவ்வேறு பரீட்சையிலும் தேறும் ஒவ்வொரு மாணவருக்கும் இவ்வளவு இவ்வளவு ரூபாய் உதவியளிப்பதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அவற்றின் விவரம் பின்வருமாறு :— (1) காதி பிரவேச பரீக்ஷை ரூ. 150. (2) நெசவு ஊழியர் ரூ. 100. (2) ஈரிழை நெசவு ரூ. 60. (4) நூற்பு ஊழியர் ரூ. 60. இந்த உதவி மாணவர்கள் பயிற்சி பெறும் எந்த ஸ்தாபனம் சங்கத்தின் சிக்ஷா சமதியிடம் ஒப்பம் பெற்று போதனையும் பரீக்ஷைகளும் நடத்தி வந்திருக்கிறதோ அதற்கே அளிக்கப்படும்.

26. அங்கீகாரம் :

கிராமங்களில் சம்பூர்ண சேவை வேலை ஏதேனும் ஒரு கிராமத்திலிருந்தோ அக்கம் பக்கத்திலுள்ள சில கிராமங்களின் தொகுதியிலிருந்தோ தொடங்கும். இவ்வாறு பல ஸ்தலங்களில் சேவை தொடங்கி சிறிது காலமான பிறகு அவற்றிடையே தொடர் பேற்படுத்துவதற்காக அவற்றைச் சேர்த்து கூட்டமைப்பொன்று ஏற்படுத்தத் தேவை உண்டாகலாம். இந்தக் கூட்டமைப்பே சிறிது சிறிதாக வளரலாம். ஆனால் அதை ஒரு ஜில்லாவுக்கு வெளியே பரந்து வளரும்படி விடக்கூடாது. இந்த கூட்டமைப்பு புதிய திட்டப்படி வேலை செய்வதற்கு சுதந்திரம் பெற்றிருக்க வேண்டியதோடு சுயதேவைப் பூர்த்தி செய்வதாயும் இருக்க வேண்டும். சங்கம் அங்கீகாரமளிக்குமானால் சுதந்திரமாக வேலை செய்வதற்கும் அதற்கு அனுமதியளிக்கப்படும். அங்கே வேலையெல்லாம் சர்க்கா சங்கத்தின் கொள்கையின்படி நடந்துவரும் வரையில் அதற்கு சர்க்கா சங்கத்தின் ஆதரவும், அங்கீகாரமும் கிடைத்துக்கொண்டே யிருக்கும்.

அங்கீகாரம் பெற்ற ஸ்தாபனம் காந்திஜி வகுத்துள்ள நிர்மாண திட்டங்களின் மூலமாக கிராம மக்களின் கூட்டுறவு, பொருளாதார சுயதேவைப் பூர்த்தி என்ற அஸ்திவாரத்தின் மீது சம்பூர்ண முன்னேற்றத்தை நோக்கமாகக் கொண்டு வேலை செய்து வரும். அந்த ஸ்தாபனம் பொதுஜன உதவிக்கென அமைந்துள்ள ஊழியர் சங்கம் என்ற வகையில் ரெஜிஸ்டர் செய்யப்பட வேண்டும். அந்தக் கமிட்டியில் அதிகமானால் 11 அங்கத்தினர்கள் இருக்கவேண்டியதோடு அவர்களில் குறைந்தது 3 பேர் கிராமத்திலேயே இருந்து கொண்டு தம் முழு நேரத்தையும் கிராம ஸேவையில் செலவழிப்பவராக இருக்க வேண்டும். அவர்கள் உடை சுயதேவைப் பூர்த்தி செய்வோராயும், முழுதும் கதரே உடுத்துவோராயும் அஹிம்சையை ஆதாரமாகக் கொண்ட சமுதாய நிர்மாணத்தில் நம்பிக்கை உள்ளவராயும் இருக்கவேண்டுமென்று சொல்லத் தேவையில்லை. அங்கீகாரம் பெறும் சமயத்தில் இந்த ஸ்தாபனம் தம் எல்லைக்குள் ஆயிரத்தில் குறைந்தது 1 குடும்பமாவது சம்பூர்ணமாக கதர் உடுத்துவதாயும் அதன் தலைவன் சுயதேவைப் பூர்த்தி செய்வோனாயும் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. உபயோகிக்கப்படும் உபகரணங்களெல்லாம் அங்கேயே கிடைக்கவும், நூற்கப்படும் நூல்களெல்லாம் அங்கேயே நெய்யப்படவும் வேண்டும். ஸ்தாபனம் அங்கே தயாராகும் கதரை தம் எல்லைக்கு வெளியே அனுப்பக்கூடாது. உடை சுயதேவைப் பூர்த்தியே நமது நோக்கமாகையால் சங்கத்தின் அனுமதியின்றி வெளியிலிருந்து அங்கே கதரைத் தருவித்துக்

கொள்ளக் கூடாதென்ற நிபந்தனையும் உண்டு. தொழிலாளர் சமூகத்திலோ உடை சுயதேவைப் பூர்த்தி வேலை பிரசாரத்தின் மூலமாகவும், விஷயங்களை எடுத்துக் கூறியும், அவர்கள் தாமே விரும்பிச் செய்வதாக இருக்கவேண்டும். அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய கூலியை துணியாகக் கொடுப்பது கூடாது. ஸ்தாபனத்தின் கணக்கு வழக்குகள் முறையாக எழுதப்பட்டு வருவதோடு எல்லோருக்கும் பார்க்கவும் கிடைக்க வேண்டும்.

27. கதரும் அரசாங்கமும் :

1938-ல் பல மாகாணங்களில் காங்கிரஸ் அதிகாரத்திற்கு வந்தபொழுது அவ்வரசாங்கங்கள் கதர் வேலைக்குத் தம்மாலான உதவி அளித்தன. சங்கமும் அதையேற்று தன் வேலையை விருத்தி செய்தது.

இப்பொழுது 1946-ல் காங்கிரஸ் மந்திரி சபைகள் மீண்டும் அமைக்கப்படவே, கதர் வேலைக்கு அரசாங்க அதிகாரத்தை எவ்வகையில் பயன்படுத்தலாம் என்ற விஷயம் கதர் அன்பர்களையும் சர்க்கா சங்கத்தையும் சிந்தனையில் புகுத்திற்று. பெரிதும் ஆலோசித்த பிறகு 1946 அக்டோபரில் சங்கம் பின்வரும் தீர்மானத்தை நிறைவேற்றிற்று. மிகவும் தெளிவாயிருப்பதால் அதை மேலும் விளக்கத் தேவையில்லை :

1. "அகில பாரத சர்க்கா சங்கத்திற்கு இந்தியாவிலும் மலேயாவைப் போன்ற உலகத்தின் மற்ற தேசங்களிலும் இப்பொழுது ஏற்பட்டுள்ள துணிப் பஞ்சம் இனி என்றுமே தோன்ருதிருக்கச் செய்வதற்குச் சிறந்த சாதனம் ராட்டையும், கைத்தறியுமேயென்ற நம்பிக்கை அனுபவத்திலிருந்து பிறந்திருக்கிறது. இந்தியாவில் மட்டுமே பழைய காலத்திலிருந்து கை நூற்பு கை நெசவு ஆகியவற்றினல் கதர் தயாரிக்கப்பட்டு வந்து, ஏராளமான ஆலைகள் தோன்றியுள்ள இக்காலத்திலும் சுத்தக் கதர் ஏராளமாக உற்பத்தியாகி வருகிறது. சர்க்கா சங்கம் வேலை செய்து வந்துள்ள கடந்த 20 வருஷங்களில் சுமார் 7 கோடி ரூபாய் நாட்டின் எளிய நூற்போரிடையே விநியோகித்திருக்கிறது.

2. எந்த அரசாங்கங்கள் கிராமக் கைத்தொழில்களுக்கும் பொருளாதார அமைப்புக்கும் மதிப்பளித்து கதர் வேலை செய்ய விரும்புகின்றனவோ அவை கீழே காணும் விஷயங்களுக்கு ஏற்பாடு செய்தல் மிகவும் அவசியமாகும் :

(க) 5 வருஷதிட்டமொன்று வகுத்துத் தன் ராஜ்யமெங்குமுள்ள எல்லா ஆரம்ப மத்தியதரப் பள்ளிக்கூடங்களிலும் நார்மல் பள்ளிக்கூடங்களிலும் நூற்புக்கு முக்கியமான கலையென்ற வகையில் இடமளித்து அதைப் போதிக்க ஏற்பாடு செய்வதுடன் ஒவ்வொரு

பள்ளிக்கூடத்திலும் நெய்வதற்குக் குறைந்தது ஒரு தறியாவது தவருமல் அமைக்கவேண்டும். பள்ளிக்கூடங்களிலெல்லாம் ஆதாரக் கல்வியை கூடியவிரைவிலும் அதிக அளவிலும் ஆரம்பித்து நடத்தவேண்டும்.

(ங) 'பல தொழில் கூட்டுறவு சங்கங்களி'ன் மூலமாக கிராமச் சீர்த்திருத்தத்தின் ஒரு பகுதியென்ற வகையில் கதர் வேலையைச் செய்ய வேண்டும்.

(ச) இப்பொழுது பருத்தி பயிராகாத இடங்களில் அதைப் பயிர் செய்வதற்கும் நூற்பவர்களுக்கு பஞ்சு, பருத்தி, உபகரணங்கள் ஆகியவை சுலபமாகக் கிடைப்பதற்கும் ஏற்பாடு செய்யவேண்டும்.

(ஞ) 'கதர் விசாரத்'களைத் தயாரிப்பதோடு கதரைப் பற்றிச் சோதனைகளும் நடத்தவேண்டும்.

(ட) கிராம முன்னேற்ற வேலையில் ஏதேனும் ஒரு வகையில் நூற்பு இடம்பெற்றே தீருமாகையால் அரசாங்கத்தின் கூட்டுறவு இலாக்கா, கல்வி இலாக்கா, விவசாய இலாக்கா, ஜில்லா போர்ட், கிராமப் பஞ்சாயத்து ஆகியவற்றின் எல்லா ஊழியர்களும் உத்தியோகஸ்தர்களும் காதிபிரவேசப் பரீக்ஷையில் தேறவேண்டுமென்று விதிப்பதோடு தேருதவர் எவருக்கும் புதிதாக உத்தியோகம் கொடுக்கக்கூடாது.

(ண) இபபொழுது ஆலை நூலைக்கொண்டு கைத்தறியில் நெய்த துணியின் விலைகளின் மீது கட்டுப்பாடு இல்லாமலிருக்கிறது. கட்டுப் பாட்டை இப்பொழுது ஏற்படுத்தவேண்டும்.

(த) அத்தாட்சி பெருத துணி கதரென்று விற்கப்படுவதை அனுமதிக்கக்கூடாது.

(ந) சர்க்காரின் 'டெக்ஸ்டைல்' இலாக்காவிலும் நெசவுப் பள்ளிக்கூடங்களிலும் கை நூலை மட்டுமே உபயோகிக்கவேண்டும். சிறைகளில் கை நூற்பும் கைநூல் நெசவும் நடைபெறவேண்டும்.

3. மாகாண சர்க்கார்களும் சுதேச சமஸ்தானங்களும் மற்ற விஷயங்களோடுகூட மேலே கண்டவைகளையும் செய்து கதரைப் பரப்புவதற்கு முயலவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகின்றன. இவ்வேலையை வெற்றிகரமாக நடத்துவதற்கு சர்க்கா சங்கமும் அதன் கிளைகளும் தம்மாலான உதவியை யெல்லாம் அளிக்க சித்தமாயிருக்கின்றன.

4. சர்க்கா சங்கத்தைக் கலந்துகொண்டு அரசாங்கங்களும் ஆலைகளுமாகச் சேர்ந்து எங்தெந்த இடங்களில் கைநூற்பு, கை நெசவு ஆகியவற்றினுலேயே துணித்தேவை முழுவதையும் பூர்த்தி செய்துகொள்ள முடியுமோ, அங்கே ஆலைத்துணியும், நூலும் அனுப்பப்படாதிருப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இதைத்

தவிர புதிய ஆலைகளை அமைக்காமலும் பழைய ஆலைகளில் நடை பெறும் நூற்பையும் நெசவையும் பெருக்காமலுமிருக்கவேண்டும். ஆலைகளின் நிர்வாகம் சர்க்கா சங்கம், சர்க்கார் ஆகியவற்றின் ஆலோசனையின்படி நடக்கவேண்டும். வெளிநாட்டிலிருந்து எவ் வகை நூலோ துணியோ நாட்டிற்குள் வரக்கூடாது.

இவற்றையெல்லாம் செய்வதற்குத் தேவையான சட்டங்களை அரசாங்கம் நிறைவேற்றி அவற்றை அமுலுக்குக் கொண்டு வர வேண்டும். மில் முதலாளிகள் கோடிக்கணக்கான மக்களுக்குப் பயன்படும் இவ்வேலைக்கு உதவிசெய்து மக்களின் ஆதரவைப் பெறுமாறு வேண்டப்படுகிறார்கள்.

28. அரசாங்கப் பள்ளிக்கூடங்கள் :

கதரை பெருத்த அளவில் பரப்புவதற்கு திட்டம்வகுக்கவேண்டு மானால் ஆரம்ப மத்தியதரப் பள்ளிக்கூடங்களில் நூற்பை ஆரம் பிப்பதன் மூலமாக அதைத் தொடங்கவேண்டுமென்பது சங்கத்தின் உறுதியான அபிப்பிராயமாகும். இனி ஏதேனும் மூலக் கைத் தொழிலைக் கருவியாகக்கொண்டு போதிக்கப்படும் கல்வியே அரசாங்க அங்கீகாரத்தைப் பெறத் தகுதியுள்ளதாகும். இதற்கனுகூலமான சூழ்நிலையைத் தோற்றுவிப்பதற்கு சுளுவானதும், நேரிடையானது மான உபாயம் பள்ளிக்கூடங்களில் பெருத்த அளவில் கைத்தொழில் ஒன்றைத் தொடங்குவதேயாகும். பெரும்பாலான பள்ளிக்கூடங் களில் நூற்பை கைத்தொழிலாகக் கொண்டு நடத்தவேண்டும். இந்தியாவில் தோன்றியுள்ள துணிப் பஞ்சத்தை ஓரளவு போக்க உதவக் கூடியது என்றவகையிலும் பள்ளிக்கூடங்களில் நூற்புக்கு மிகவும் உயர்ந்த இடமுண்டு. துணிப்பஞ்சத்தைப் போக்குவதற்கு நாமும் ஓரளவு உதவி செய்து வருகிறோமென்ற எண்ணம் சிறு பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும் உண்டாகுமானால் அது நம் நாட் டின் முன்னேற்றத்தில் மிகவும் முக்கியமான விஷயமாகக் கருதப் படும்.

இப்பொழுதுள்ள பள்ளிக்கூடங்களில் வருஷத்தில் 200 நாட் களே வேலை நடக்கிறதென்று வைத்துக் கொண்டாலும் 1 நாளைக்கு ஒரே மணி நேரம் சம்பூர்ண நூற்புக்கென ஒதுக்கப்படுமானால் 1 மணிக்கு இரண்டு குஞ்சம் என்ற கணக்குப்படி ஒவ்வொரு மாணவ மாணவியும் 1 வருஷத்தில் 50 சிட்டம் நூல் நூற்று விட முடியும். இதைக் கொண்டு $12\frac{1}{2}$ ச. கெ. துணி சுலபமாகத் தயா ரித்து விடலாம். சாதாரணமாக ஜனத்தொகையில் 15 சதம் பெண் களும் பிள்ளைகளும் பள்ளிக்கூடங்களில்போய் படிக்கத் தகுதியுள்ள வர்களாக இருப்பார்கள். நம் நாட்டின் ஜனத்தொகையோ 30 கோடிக்குக் குறைவில்லை. இதிலிருந்து எல்லாப் பள்ளிக்கூடங்

களிலும் நூற்பு நடைபெறுமானல் எவ்வளவு துணி தயாராகுமென்பதைக் கணக்கிட்டுக் கொள்ளலாம்.

அரசாங்கமும் பொது ஸ்தாபனங்களும் ஜில்லா போர்ட் முனிசிபாலிடிகளும் விரும்புமானல் சர்க்கா சங்கம் தம் வித்தியாலயங்களில் அவற்றின் பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கு நூற்பு நெசவு ஆகியவற்றில் போதனையளித்துத் தயாரிக்க முடியும். இத்தகைய ஆசிரியர்களுக்கென தனித்தனியாகப் பயிற்சிதிட்டங்களும் வகுக்கப்பட்டிருக்கின்றன. இந்த வித்தியாலயங்களில் இப்பொழுது போதனைக் கட்டணம் மாதத்திற்கு ரூ. 10 முதல் ரூ. 15 வரையில் வாங்கப்படுகிறது. பயிற்சி பெற வருவோர் துர்ப்பழக்கங்கள் இல்லாதவராயும் கதர் உடுத்துவோராயும் இருத்தல் வேண்டும். நமது வித்தியாலயங்களில் வேலைக்காரர்களை வைத்துக் கொள்ளும் வழக்கமில்லை. சமையல், மாவரைத்தல், சாதாரணக் கூட்டுவேலை முதல் கக்கூஸ் சுத்தம் வரையில் எல்லாவற்றையும் மாணவர்களே செய்ய வேண்டும்.

வித்தியாலயங்களின் வெவ்வேறு பாட திட்டங்களும் முழுவிதிகளும் விண்ணப்பப்பத்திரமும் வேண்டுவோர் தலைமைக் காரியாலயத்திற்கு எழுதிப்பெற்றுக் கொள்ள்லாம்.

பள்ளிக்கூடங்களில் நூற்பை நடத்துவதனல் தயாராகும் நூலை சர்க்கா சங்கம் விலைக்கு வாங்கிக் கொள்ளாது. தயாராகும் நூலை அந்தந்தப் பள்ளிக்கூடங்களிலேயே நெய்வித்துக் கொள்ள ஏற்பாடு இருக்க வேண்டுமென்பது சங்கத்தின் விருப்பம். இதனல் நூற்பின் தன்மையும், நூலின் குண தோஷங்களும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் தெரியவரும். இதன் பொருட்டு ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் குறைந்தது ஒரு தறியாவது அவசியம் இருந்து வரவேண்டுமென்பது சங்கத்தின் ஆலோசனையாகும்.

நூற்பை ஒரு போதனைத்தொழிலாக பள்ளிக்கூடங்களில் நடத்துவதற்கு உபகரணங்கள் தேவையாகும். சர்க்கா சங்கம் தன் உற்பத்திசாலைகளைக் கொண்டும் தன்னுடன் சம்பந்தம் கொண்டுள்ள பிற உற்பத்தி சாலைகளைக் கொண்டும் உபகரணங்களை விலைக்குத்தர முயற்சி செய்யும். ஆனல் எல்லாப் பள்ளிக்கூடங்களிலுமே நூற்புப் பயிற்சிக்கு ஏற்பாடு செய்ய அரசாங்கம் விரும்புமானல் சொந்தத்திலேயே உபகரண உற்பத்திசாலை ஆரம்பித்து நடத்தவேண்டும். அதில் விசேஷக்ஞன் என்ற முறையில் சங்கம் தன் அனுபவத்தில் தெரிந்துள்ள விஷயங்களைக் கொண்டு தன்னாலான உதவியளிக்கக்கூடும். தேவையான பொழுது அரசாங்கத்தின் ஊழியர்களுக்கும் தகுந்த பயிற்சியளிக்க ஏற்பாடு செய்யக்கூடும்.

29. சிறையில் நூற்பு:

சிறைகளில் நூற்புக்கு ஏற்பாடு செய்ய முடியுமானால் அதன் மூலமாக பொருள் வருவாய் ஏற்படுவதோடு கைதிகளின் நடத்தையும் திருந்து மென்பது சர்க்கா சங்கத்தின் நம்பிக்கையாகும். மற்றத் தொழில்களுடன் ஒப்பிடும் பொழுது நூற்பினால் சிறைகளில் விசேஷ பொருள் வருவாய் ஏற்படுமென்று தோன்றாது. ஆனால் அதிக சிரமமில்லாத தென்ற வகையில் நூற்பை ஒரு வேலையென விதிக்கலாம். ஆனால் சிறைகளில் நூற்பு நடைபெறச் செய்து அதிலிருந்து லாபமும் காணவேண்டுமானால் கைதிகள் கொட்டடிகளில் இருக்கும்பொழுதும் தம் விருப்பம் போல் நூற்பதற்கு வசதியளிக்க வேண்டும். சிறைகளில் கைதிகள் கொட்டடிகளில் அடைக்கப் படுவதிலிருந்து தூங்கும் வரையில் உள்ள 3,4 மணி நேரமும் காலையில் சிறிது நேரமும் ஒரு வேலையும் செய்யமுடியாமல் பொழுதை வீணில் கழிக்கவேண்டியிருக்கிறது. 'சோம்பேறி மனம் சைத்தானின் இருப்பிடம்' என்றபடி கைதிகள் இந்நேரத்தை ஒருவரையொருவர் திட்டுவதிலும் சண்டை சச்சரவுகளிலும் செலவழிக்க வேண்டியிருப்பதால் அவருடைய நடத்தை திருந்துவதற்கு பதிலாக சிறைவாசத்தினால் மேலும் கெட்டேபோகிறது. சிறைகளைத் திருத்த வேண்டுமானால் கைதிகளுக்குத் தாமே படிக்கவும், தம் இஷ்டப்படி அமைதியாயிருந்து ஏதேனும் ஒரு கைத்தொழிலைச் செய்யவும் வசதியளிக்க வேண்டும். நூல் நூற்பதென்பது அமைதியான கைத்தொழில்களிலெல்லாம் சிறந்ததாகும்.

இத்தகைய ஏற்பாட்டினால் மிகவும் சுலபமாகச் சிறைகளிலேயே கைதிகளுக்குத் தேவையான எல்லாத் துணிகளையும் உற்பத்தி செய்துவிடலாம். சிறைத் தோட்டத்திலேயே பருத்தியைப் பயிர் செய்வித்து சிறையிலேயே நூற்பும் நெசவும் நடத்தப்படுமானால் துணியின் விஷயத்தில் சிறைகள் பூர்ணமாக சுயதேவைப் பூர்த்தி செய்ய இயலும். இதற்கு ஒரு கைதி சிறைக்கு வந்தவுடனேயே முதல் 15 தினங்கள் வரையில் அவனுக்கு நூல் நூற்கக் கற்றுக் கொடுத்து, கொட்டடியில் அடைபட்டிருக்கும் பொழுதும் நூற்புக்கு வேண்டிய கருவிகளும் பொருள்களும் கொடுத்து நூற்பதில் ஊக்கம் பிறப்பதற்காக இனாம்களோ சிறைவாச நாட்களில் கழிவோ கொடுக்கவேண்டும். சிறைகளில் பெண்களுக்கும் முதியோருக்கும் நூற்பையே வேலையாகக் கொடுத்தலும் உசிதமென்று தோன்றுகிறது.

101476

23A
4-83

'கதர் மலர்' பிரசுரங்கள்

காந்தி தத்துவம்

	விலை			த. செலவு		
காந்திய நவநீதம் (மஷ்ருவாலா) 2-ம் பதிப்பு	2	0	0	0	1	6
காந்திஜியின் குரல் (வினோபா) 2-ம் பதிப்பு	0	10	0	0	0	9
சமூகத்தில் ஸ்திரீகள் ஸ்தானம் (பேங்கர்)	0	4	0	0	0	9
Constructive Programme (காந்திஜி)	0	6	0	0	0	9
காந்தி ஆசிரம பஜனாவளி 2-ம் பதிப்பு	0	8	0	0	1	3
ஸர்வோதயம் (காந்திஜி)	0	10	0	0	1	3
மலஜல சுத்தி (வல்லபஸ்வாமி)	0	8	0	0	1	0

கதர்க்கலை

நரம்பு செய்தல் (சத்தியன்)	0	8	0	0	0	9
சுளுவான பட்டை (கே. தேவதர்)	0	6	0	0	0	9
தக்ளியால் நூற்பதெப்படி ? (சத்தியன்)	0	10	0	0	1	0
கிஸான் ராட்டை (பிரபாகர் திவான்)	1	0	0	0	1	3
கதர் உபகரணங்கள்	1	0	0	0	1	3
நூற்புக் கணிதம் பாகம் 1 (கி. காந்தி)	0	6	0	0	0	9
,, ,, 2 (,,)	0	12	0	0	1	3
ராட்டைப் புரட்சி (மஜூம்தார்)	0	6	0	0	0	9
புதிய கதர் இயக்கம் (காந்திஜி)	0	12	0	0	1	3
கைராட்டை (புந்தம்பேகர், வரதாச்சாரியார்) 2-ம் பதிப்பு	1	8	0	0	1	6
அ. பா. சர்க்கா சங்க வரலாறு	1	0	0	0	1	3
Swaraj through Charkha (காந்திஜி)	0	4	0	0	0	9
சர்க்கா சங்க வேலைத்திட்டம்	0	8	0	0	1	0

தொகுப்பு நூல்கள்

புனர் நிர்மாணம் பாகம் 1	0	12	0	0	1	0
,, ,, ,, 2	0	8	0	0	0	9
கதர் மலர் பாகம் 2	0	8	0	0	1	3
,, ,, 3	0	12	0	0	0	9

"கதர் மலர்"

காந்தி தத்துவம், நிர்மாணதிட்டம், கதர்க்கலை ஆகியவற்றை விளக்கும் சிறந்த கட்டுரைகளைத் தாங்கி பிரதி மாதமும் முதல் வாரத்தில் அகில பாரத சர்க்கா சங்கம், தமிழ் நாட்டுக் கிளையின ரால் கைக்காகிதத்தில் அச்சிட்டு வெளியிடப்படுவது.

வருஷ சந்தா ரூ. 5-0-0   தனிப்பிரதி ரூ. 0-8-0

எல்லாக் கதர் வஸ்திராலயங்களிலும் கிடைக்கும்.